விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 007 வள்ளுவர் ஆண்டு 2056 மார்கழி 11 வெள்ளிக்கிழமை (26.12.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்.கோட்டை முனியப்பர் ஆலய


# முகப்பு வாயிலை தடுத்தது

# தொல்லியல் திணைக்களம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயத்தின் முகப்புப் பாதையை தொல்லியல் திணைக்களம் தடை செய்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)






## ஜோசப் பரராஜசிங்கத்தின்

## படுகொலைக்கு நீதி கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்



15ஆம் பக்கம் பார்க்க



வலம்புரியின்
தெய்வீக வர்ணக் கலண்டர்
நாளை (27.12.2025) தவறாது கேட்டு வாங்கவும்

## கிறிஸ்துமஸ் தினத்தில் உறவுகள் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## கருத்துச் சுதந்திரத்துக்கு முட்டுக்கட்டையிட்டு

# சர்வாதிகார ஆட்சியை நோக்கி நாட்டைக் கொண்டு செல்ல அரசு முயற்சி

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் கருத்துச் சுதந்திரத்திற்கு முட்டுக்கட்டை இட்டு, நாட்டை ஒரு சர்வாதிகார ஆட்சியை நோக்கிக் கொண்டு செல்ல முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றம் சாட்டியுள்ளார்.

ஊடக சுதந்திரம் மீதான

02ஆம் பக்கம் பார்க்க

## கண்டியில் 5 கிராமங்கள்

# ஆள்நடமாட்டத்துக்கு தகுதியில்லை எனப் பிரகடனம்

(கொழும்பு)

டித்வா புயலால் ஏற்பட்ட கடுமையான நிலச்சரிவுகளைத் தொடர்ந்து கண்டி மாவட்டத்தில் ஹசலக நகர் பமுனுபுர பகுதியை ஒட்டியுள்ள ஐந்து கிராமங்கள் ஆள் நடமாட்டத்திற்கு தகுதி இல்லாத பகுதிகளாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தப் பகுதியில் பெரும் நிலப்பகுதிகள் சுமார் 40 அடி ஆழத்திற்கு இடிந்து

15ஆம் பக்கம் பார்க்க

## மாத்தறையில் பஸ் விபத்து

# 30 பேர் காயம்

(மாத்தறை)

மாத்தறை - பெலியத்த பிரதான வீதியில் ஹந்த பான் கொடெல்ல பகுதியில் நேற்று (25) பிற்பகல் இடம்பெற்ற வீதி விபத்தில் 30 பேர் காயமடைந்துள்ளனர்.

15ஆம் பக்கம் பார்க்க

# முன்னாள் ஜனாதிபதி மகிந்த கொழும்புக்குத் திரும்பினார்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவருமான மகிந்த ராஜபக்ஷ, தற்காலிகமாகக் கொழும்பு நுகேகொடை பகுதியிலுள்ள இல்லம் ஒன்றில் குடியேறியுள்ளதாக அவரது ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி மனோஜ் கமகே தெரிவித்துள்ளார்.

சுமார் ஒரு வாரத்திற்கு முன்பே அவர் நுகேகொடையில் உள்ள இல்லத்திற்கு வந்துள்ளார்.

அரசியல் நடவடிக்கைகளில்

02ஆம் பக்கம் பார்க்க

## நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வாதிகார...

அரசாங்கத்தின் அழுத்தம் குறித்து நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த அறிவிப்பில் மேலும் தெரியவருவது,

ஒரு ஜனநாயக நாட்டின் நான்கு முக்கிய தூண்களாக சட்டவாக்கம், நிறைவேற்று அதிகாரம், நீதித்துறை மற்றும் ஊடகம் ஆகியவை விளங்குகின்றன.

ஆனால் தற்போதைய அரசாங்கம் பொலிஸாரைக் கருவியாகப் பயன்படுத்தி மக்களின் ஜனநாயக உரிமைகளையும் பொலிஸில் பணிபுரியும் அதிகாரிகளின் உரிமைகளையும் மீறி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

நாட்டின் உண்மையான தகவல்களை அறிந்துகொள்ளும் மக்களின் உரிமையைப் பறித்து, ஒரு "பொலிஸ் அரசை" (Police State) உருவாக்க அரசாங்கம் முயல்கிறது.

"சுதந்திர ஊடகங்கள் தங்களின் கருத்துக்களை ஆதாரங்களுடன் முன்வைத்தாலும் அதைத் தடுத்து ஊடகங்களை ஒடுக்கப் பொலிஸாரைப் பயன்படுத்துவது ஜனநாயகத்திற்கு எதிரானது என சஜித் பிரேமதாச சாடியுள்ளார்.

மக்களின் ஆணை சர்வாதிகாரத்திற்கானது அல்ல மக்களின் அமைதியான பெரும்பான்மையினரின் குரலாக சுதந்திர ஊடகங்கள் விளங்குகின்றன.

அவற்றை ஒடுக்குவது என்பது சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுக்கும் செயலாகும். மக்கள் இந்த அரசாங்கத்துக்கு வழங்கிய ஆணை, சர்வாதிகாரத்தை நிலைநாட்டவோ அல்லது ஒரு "பொலிஸ் அரசை" உருவாக்கவோ வழங்கப்பட்டது அல்ல என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கம் பொலிஸாரின் சுதந்திரமான செயற்பாடுகளில் தலையிடுவதால் அதிகாரிகளால் நடுநிலையாகப் பணியாற்ற முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.

அரசியல் தலையீடுகள் இன்றி பணியாற்றும் உரிமை பொலிஸாருக்கு மறுக்கப்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

உண்மைத் தகவல்களை வெளிப்படுத்தும் ஊடகங்களின் உரிமை பறிக்கப்படுவது 220 இலட்சம் மக்களின் உரிமையை மீறுவதற்குச் சமமாகும்.

தற்போது உள்ளூராட்சி மன்றங்களின் பாதீட்டு வாக்கெடுப்புகளிலும் அரசாங்கத்தின் சர்வாதிகாரத் தலையீடுகள் காணப்படுவதாகவும் குறிப்பாக நீர்கொழும்பு மற்றும் ஹொரண ஆகிய பகுதிகளில் இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## முன்னாள்...


ஈடுபடுவதற்கும் தேவைப்படின் மருத்துவ சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்குமான இலகுத்தன்மை கருதியே அவர் கொழும்புக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கான வரப்பிரசாதங்கள் திருத்தப்பட்டதைத் தொடர்ந்து கொழும்பு 07, விஜேராம அரச இல்லத்திலிருந்து கடந்த செப்ரெம்பர் 11 ஆம் திகதி அவர் வெளியேறினார்.

அரச இல்லத்திலிருந்து வெளியேறிய பின்னர், சுமார் மூன்று மாதங்களுக்கும் மேலாக அவர் தங்கல்லையிலுள்ள "கார்ல்டன்" இல்லத்தில் தங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-7)


# மரண அறிவித்தல்

## திருமதி நடராசா இராஜேஸ்வரி



தோற்றம் 10.10.1946 மறைவு 25.12.2025

பெருந்தெரு புலோலி தெற்கினைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராஜேஸ்வரி அவர்கள் நேற்று (25.12.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வடிவேலு - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுன்னாகம் வரியப்புலத்தைச் சேர்ந்த சின்னையா - தங்கமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் சின்னையா நடராசா அவர்களின் பாசமிகு மனைவியும் ஸ்ரீஸ்கந்தராசா, பாலகிருஷ்ணன், வைகுந்தராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும் மங்கையற்கரசி, சரஸ்வதி, ஜெயராணி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.12.2025) பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஆனைவிழுந்தான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்
077 346 0920

(1846)



# நாகபூஷணி திருமண சேவை

## 50% கட்டணக் கழிவு

(24.12.2025 முதல் 05.01.2026 வரை)

அரச, தனியார்துறை, உள்நாட்டு, வெளிநாட்டு அனைத்து மணமக்கள் ஜாதகங்களும் எம்மிடம் உண்டு. மிகப் பொருத்தமாக உடன் ஜாதகங்கள் தரப்பட்டு மிகத் துரிதமாக திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.

359/6, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(துர்க்கா மணி மண்டபத்திற்கு 3 வீடுகள் தள்ளிய லேனில்)
021 222 9306, 077 138 7596, 071 999 9306

(C-4670)



# 15 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அன்னை மடியில் 21 - 06 - 1956



அநியாய அழிப்பில் 26 - 12 - 2010

## அமரர் திரு. மார்க்கண்டு சிவலிங்கம்

(B.SC, Agri, SLEAS-II)

(பிரதிக் கல்விப் பணிப்பாளர் – வலிகாமம் கல்வி வலயம்)

அன்பும் ஆளுமையும் மிக்க எங்கள் கல்வியியலாளரே
உங்கள் போதனைகள் ஒவ்வொன்றும்
எங்கள் சாதனைகளின் படிக்கற்களே
விண்ணில் நீங்கள் உறங்கினாலும்
மண்ணில் நாம் விழித்தெழுவோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(1838)

மூன்று கோயிலடி, உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.


குடும்பத்தினர்



# 21 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## இராசரத்தினம் சகிதன்

மலர்வு : 28.03.2004
உதிர்வு : 26.12.2004



ஒன்பது மாதமே பூமி கண்ட
அன்பின் முதல் மலரே,
பெயர் சொல்லும் முன்பே
நினைவாய் மாறினாயே.

தாயின் மடியில் தாலாட்டும்
முழுமை பெற முன்,
விதியின் எழுதுகோல்
உன்னை வானில் பதித்ததே.

காணாத கனவுகளோடு
கடவுளின் தோளில் துயிலும்
எங்கள் குடும்பத்தின் முதல் ஒளியே,
நீ என்றும் எங்கள் உள்ளத்தில்.

நாட்கள் நகர்ந்தாலும்
நினைவுகள் மங்காது,
ஒரு புன்னகையாய்
உன் நினைவு வாழும்.

இந்த நினைவு நாளில்
மௌனமாய் தலை வணங்குகிறோம்,
நீ இல்லாத உலகிலும்
நீ என்றும் எங்களோடு.

செ.இராசரத்தினம் (செல்வன்)
செல்லையா பல்பொருள் வாணிபம்,
கடற்கரை வீதி, முல்லைத்தீவு.
077 945 9941

என்றும் உன் வரவை எதிர்பார்க்கும்
அம்மா, அப்பா, தம்பிமார்.

(1842)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தையிட்டி விகாரையை அகற்ற முற்பட்டால் கிளர்ந்தெழுவோம்!

## சரத்வீரசேகரா மிரட்டல்



(கொழும்பு)

**யாழ். தையிட்டி திஸ்ஸ விகாரை விடயத்தில் எமது பொறுமையை மீண்டும் மீண்டும் சோதிக்கக் கூடாது. இலங்கை பௌத்த நாடென்பதை தமிழ் அரசியல்வாதிகள் ஏற்கவேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட உறுப்பினரான சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது, "திஸ்ஸ விகாரைக்கு அழுத்தம் கொடுத்து, அதனை அகற்றுவதற்கு முற்பட்டால் அதற்கு எதிராக நாங்கள் கிளர்ந்தெழுவோம். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தின் வசமிருந்த காணியில் 98 சதவீதம் விடுவிக்கப்பட்டுள்ளது.

எனவே, திஸ்ஸ விகாரை தொடர்பில் அநீதியான தகவல்களைப் பரப்பக்கூடாது.

இலங்கை பௌத்த நாடென்பதை கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சிவஞானம் சிறீதரன் உள்ளிட்டோர் புரிந்து கொள்ள வேண்டும்.

இதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். திஸ்ஸ விகாரையில் பௌத்த மக்களுக்குரிய வழிபாட்டு உரிமை மறுக்கப்படுகின்றது. அதற்கு எதிராக கஜேந்திரகுமாரின் ஆட்கள் வந்து போராட்டம் நடத்துகின்றனர்.

ஆனால் இவர்கள் கொழும்புக்கு வந்து சுதந்திரமாக கோயிலுக்குச் செல்லும் நிலை காணப்படுகின்றது. இலங்கை பௌத்த நாடென்பதால்தான் இது சாத்தியப்படுகின்றது.

இலங்கையில் வேறொரு மதம் பெரும்பான்மையாக இருந்திருந்தால், அந்த மதத்துக்கு எதிராக செயற்பட்டுவிட்டு சுதந்திரமாக இருக்க முடியுமா? பௌத்த தர்மம் ஊடாக வழங்கப்பட்ட போதனைகளால் தான் பொறுமை காக்கின்றோம்.

ஆனால் அந்த பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டு என்பதை புரிந்துகொள்ள வேண்டும். அதேவேளை, தமிழர் தாயகத்தில் விகாரை கட்ட முடியாது என யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் குறிப்பிடுகின்றது.

இது தொடர்பில் இலங்கையில் உள்ள அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் நிலைப்பாடு என்ன? வடக்கு, கிழக்கில் உள்ள பௌத்த மரபுரிமைகளை நாசமாக்கும் நிகழ்ச்சி நிரல் முன்னெடுக்கப்படுகின்றது என குறிப்பிட்டுள்ளார். (நி)

# நீர்நிலைகளை பயன்படுத்தும் போது அவதானத்துடன் செயற்படுங்கள்!

## சமூக மருத்துவ நிபுணர் அறிவுறுத்து

(கொழும்பு)

பண்டிகை காலங்களில் நீர்நிலைகளைப் பயன்படுத்தும் போது பொதுமக்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு சமூக மருத்துவ நிபுணர் சமித சிறிதுங்க அறிவுறுத்தியுள்ளார்.

தற்போது நிலவும் அனர்த்த நிலைமை காரணமாக நீர்நிலைகளின் தன்மை மற்றும் ஆழம் மாற்றமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக் காலங்களை முன்னிட்டு வீதி விபத்துக்கள் மற்றும் ஏனைய விபத்துக்கள் ஏற்படுவதற்கான அதிக வாய்ப்புகள் காணப்படுவதால், அது தொடர்பிலும் அவதானமாக இருக்குமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி)

# மண்சரிவு அபாயத்தில் பதுளை மாவட்டம்

(பதுளை)


பதுளை மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பில் சுமார் 68சதவீத பகுதி ஏதோவொரு வகையான மண்சரிவு அபாயத்தைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் பதுளை மாவட்ட புவியியலாளர் ஹர்ஷனி பெரேரா இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவிய அதிதீவிர வானிலை காரணமாக, பதுளை மாவட்டத்தில் மாத்திரம் 368 பிரதான மண்சரிவுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இந்த மண்சரிவு அபாயம் காரணமாக, சுமார் 650 வீடுகள் அதி உயர் அபாய நிலைக்குள் உள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும் பதுளை மாவட்ட புவியியலாளர் ஹர்ஷனி பெரேரா தெரிவித்துள்ளார். (நி)

# அடுத்த இரு மாதங்களில் நானுஓயா-புதுளை ரயில் சேவை



(கொழும்பு)

நானுஓயா மற்றும் பதுளை இடையிலான ரயில் சேவை இன்னும் இரண்டு மாதங்களில் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். ரயில் சேவைகளை மீள ஆரம்பிப்பது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

அதிதீவிர வானிலையால் ஏற்பட்ட அனர்த்தங்களால் சேதமடைந்த ரயில் தண்டவாளங்கள் கட்டம் கட்டமாக புனரமைக்கப்பட்டு வருவதாகவும் பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதற்கமைய, சேதமடைந்த ரயில் பாலங்களைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடக்கு மற்றும் கிழக்கு மார்க்கத்துக்கான ரயில் சேவைகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அனர்த்தங்களால் மலையகத்துக்கான ரயில் சேவைகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இருப்பினும், தொடர்ச்சியான புனரமைப்பு பணிகளுக்கு மத்தியில் பதுளை மற்றும் அம்பேவல வரையான ரயில் சேவைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன தெரிவித்துள்ளார். (நி)

# சுனாமி, டித்வா புயலில் உயிரிழந்தவர்களுக்கு நினைவேந்தல்

## 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு கோரிக்கை

(கொழும்பு)

சுனாமி மற்றும் டித்வா புயல் அனர்த்தங்களால் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில், இன்று வெள்ளிக்கிழமை காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நாட்டு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

2025 ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சுனாமி பேரழிவிலும் அண்மையில் நாட்டில் இடம்பெற்ற டித்வா புயல் தாக்கத்தின் பேரனர்த்தங்களிலும் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் நினைவேந்தல் நிகழ்வானது காலியில் உள்ள பெரிய சுனாமி



நினைவுத்தூபிக்கு முன்பாக நாளை காலை 8.30 மணி முதல் முற்பகல் 11 மணி வரை நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும், மாவட்ட செயலகத்தினை மையமாகக் கொண்டு சர்வமத பிரார்த்தனை நிகழ்வுகளை நடத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

எனவே, இரு நிமிட நிசப்தத்தை கடைபிடித்து, உயிர் நீத்தவர்களுக்கு அஞ்சலி செலுத்துமாறும் இயற்கைப் பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருமாறும் நாட்டு மக்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இலங்கையில் தனது சாதனை ஓட்டத்தை ஆரம்பித்த ஹொங்கொங் வீரர்!

ஹொங்கொங் 19 வயதுக்குட்பட்டோர் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரரும், மெல்போர்னில் உடற்பயிற்சி உடலியல் நிபுணராகப் பணியாற்றுபவருமான 24 வயதுடைய ராகுல் சர்மா, சிறுவர் புற்று நோய் ஆராய்ச்சி நிதிக்காக இலங்கையின் வடக்கு முனையிலிருந்து தெற்கு முனை வரை ஒரு வாரத்தில் ஓடி முடிக்கத் திட்டமிட்டிருந்தார்.

ராகுல் சர்மா தனது ஓட்டத்தை நேற்று முன்தினம் புதன்கிழமை இலங்கையின் வடக்கு முனையான பருத்தித்துறையில் ஆரம்பித்தார். 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தென் முனையான தேவேந்திரமுனையை சென்றடையத் திட்டமிட்டுள்ளார். சுமார் 574 கிலோமீற்றர் தூரம் கொண்ட இந்தப் பயணத்தை ஏழு நாட்களில் கடக்கவுள்ள அவர், நாளொன்றில் சராசரியாக 100 கிலோமீற்றர் தூரம் ஓடவுள்ளார்.

சிறுவர் புற்றுநோயைக் குணப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு சிட்னியைத் தளமாகக் கொண்டு இயங்கும் "சிறுவர் புற்றுநோய் நிறுவனம்" என்ற அமைப்புக்காகக் குறைந்தது 20 ஆயிரம் அவுஸ்திரேலிய டொலர்களை (சுமார் 13,052 அமெரிக்க டொலர்கள்) திரட்டுவதே இவரது இலக்காகும்.



இதற்காக அவர் கடந்த 18 ஆம் திகதி இலங்கை வந்தடைந்ததுடன் பருத்தித்துறை சுப்பர்மடம் கொடிகம்பத்திலிருந்து நேற்று முன்தினம் அதிகாலை 4.30 மணியளவில் தனது ஓட்டத்தை ஆரம்பித்தார்.

ராகுல் சர்மா திட்டமிட்டபடி இந்த ஓட்டத்தை நிறைவு செய்தால், 'Erase Poverty' என்ற ஹொங்கொங்கைச் சார்ந்த அறக்கட்டளை 10 ஆயிரம் ஹொங் கொங் டொலர்களை (1,286 அமெரிக்க டொலர்கள்) நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது. (3)

# விஜய் ஹசாரே கிண்ணம்

## கோலியின் அபார சதத்தால் வெற்றி பெற்ற டெல்லி!




33ஆவது விஜய் ஹசாரே கிண்ண ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடர் நேற்று முன்தினம் புதன்கிழமை முதல் ஜனவரி 18 ஆம் திகதி வரை அகமதாபாத், ராஜ்கோட், ஜெய்ப்பூர், பெங்களூரு ஆகிய 4 நகரங்களில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஒரு ஆட்டத்தில் டெல்லி - ஆந்திரா அணிகள் மோதின. இதில் டெல்லி அணிக்காக இந்திய அணியின் நட்சத்திர வீரர்களான விராட் கோலி, பண்ட் விளையாடினர். இந்தப் போட்டிக்கான நாணயச் சுழற்சியில் வென்ற டெல்லி அணியின் கப்டன் பண்ட் பந்து வீச்சைத் தேர்வு செய்தார். அதன்படி முதலில் களமிறங்கிய ஆந்திரா அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு 298 ஓட்டங்கள் எடுத்தது. அந்த அணியில் சிறப்பாக விளையாடி ரிக்கி புய் சதமடித்து 122 ஓட்டங்கள் எடுத்தார்.

தொடர்ந்து விளையாடிய டெல்லி அணியில் விராட் கோலி, நிதிஸ் ராணா, பிரியன்சி ஆர்யா ஆகியோர் அதிரடியாக விளையாடி ஓட்டங்கள் குவித்தனர். ராணா 77 ஓட்டங்கள் பிரியன்சி ஆர்யா 74 ஓட்டங்கள் எடுத்தனர். மறுபுறம் பொறுப்புடன் விளையாடிய விராட் கோலி சத மடித்து அசத்தினார். அவர் 131 ஓட்டங்கள் எடுத்தார்.

இறுதியில் 37. 5 ஓவர்களில் டெல்லி 6 விக்கெட் இழப்பிற்கு 300 ஓட்டங்கள் எடுத்து 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (3)

# 26 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கைக்கு கிடைத்துள்ள வாய்ப்பு!



ஆசிய ரக்பி 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகளை நடத்தும் உரிமையை இலங்கை ரக்பி பெற்றுள்ளது.

இதன் மூலம் 26 ஆண்டுகளுக்குப் பிறகு எலைட் ஜூனியர் போட்டியை நடத்த மீண்டும் இலங்கைக்கு வாய்ப்பு கிடைத்துள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இலங்கை கடைசியாக 2000 ஆம் ஆண்டு போட்டியை நடத்தியது. அப்போது சொந்த அணி மூன்றாவது இடத்தைப் பிடித்து அடுத்த ஆண்டு சிலியில் நடந்த ஜூனியர் ரக்பி உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெற்றது. வரவிருக்கும் போட்டிகள் கண்டியில் முதன்முறையாக நடத்தப்படவுள்ளன.

இந்தப் போட்டியில் ஆசியாவின் நான்கு வலிமையான வளர்ந்து வரும் ஜூனியர் ரக்பி நாடுகளான - இலங்கை, கொங்ஹொங், தென் கொரியா மற்றும் சீன தைபே ஆகியவை இடம்பெறவுள்ளன. (3)

# கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ். மாவாட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கடற்கரை கரப்பந்தாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வல்வெட்டித்துறை உதய சூரியன் உல்லாசக் கடற்கரையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் வ.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலக விளையாட்டுத்துறை உத்தியோகத்தர் சி.ஜிவிந்தன், சிறப்பு விருந்தினராக வல்வை உதயசூரியன் விளையாட்டுக் கழகத் தலைவர் மு.ஜெயதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தொடர்ந்து மாலை 4 மணிக்கு இறுதிப் போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்வித் திணைக்கள பிரதிக் கல்விப் பணிப்பளார் இ.ராஜசீலன் கலந்து கொள்ளவுள்ளமை குறிபிடத்தக்கது. (3)

# உலக கிரிக்கெட் வரலாற்றில் சரித்திரம் படைத்த பீகார் அணி!

இந்திய கிரிக்கெட் வரலாற்றில் மட்டுமல்லாது, உலக கிரிக்கெட் வரலாற்றிலும் ஒரு மறக்க முடியாத நாளை பீகார் அணி பதிவு செய்துள் ளது.

விஜய் ஹசாரே கிண்ணத் தொடரில் அருணாச்சல பிரதேசத்திற்கு எதிரான போட்டியில் பீகார் அணி பல உலக சாதனைகளைத் தகர்த்துள் ளது. குறித்த போட்டியில் பீகார் அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக் கெட்டுகளை இழந்து 574 ஓட் டங்களைக் குவித்தது.

இதன்படி லிஸ்ட் ஏ கிரிக்கெட் வரலாற்றில் அதிகபட்ச அணி ஓட்டங் கள் என்ற உலக சாதனையை பீகார் அணி படைத்துள்ளது.



இதற்கு முன் 2022ஆம் ஆண்டு தமிழ்நாடு அணி 506 ஓட்டங் களைக் குவித்ததே சாதனையாக இருந்தது. தற்போது குறித்த சாதனையைப் பீகார் அணி முறியடித்துள்ளது.

இப்போட்டியில் மற்றொரு பிரமிக்க வைக்கும் சாதனையாக, சகிபுல் கனி வெறுமனே 32 பந்து களில் சதம் விளாசினார்.

இதன் மூலம் லிஸ்ட் ஏ கிரிக் கெட்டில் அதிவேகமாக சதம் அடித்த இந்திய வீரர் என்ற புதிய சரித்திரத்தை அவர் படைத்தார். அவர் இறுதிவரை ஆட்ட மிழக்காமல் 128 ஓட்டங்களைக் குவித்தார்.

மேலும் 14 வயதான வைபவ் 190 ஓட்டங்களை விளாசி, மிக இளைய வயதில் சதம் அடித்த வீரர் என்ற உலக சாதனையைத் தன்வசப்படுத்தினார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுற்றாடல் சட்டங்களை மீறினால்

# கடும் நடவடிக்கை

## பொலிஸார் தெரிவிப்பு

**(கொழும்பு)**

**சுற்றாடல் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

இது குறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவி பொலிஸ் அத்தியட்சகருமான எஃப்.யூ.வுட்லர், கடந்த சில நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் போது, சுற்றாடல் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 23 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.



அத்துடன், எதிர்காலத்தில் நாடு முழுவதும் இவ்வாறான சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மேலும் தெரிவித்தார். (ஙி)

# பண ஆசையால் நாட்டை சீரழித்த அரசியல்வாதிகள்

## அரசியல்வாதிகளை முழுமையாக விமர்சித்த பேராயர்

(கொழும்பு)

மேசைக்கு அடியால் பணத்தை வாங்கிக் கொண்டு இயற்கைக்கு மாறான செயற்பாடுகளுக்கு அனுமதியளித்த அரசியல்வாதிகள் செய்த தவறே மண்சரிவுகள் மற்றும் வெள்ளப் பெருக்கு ஏற்பட காரணமாகும் என பேராயர் மெல்கம் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.

நத்தார் பண்டிகையின் தேசிய நிகழ்வு நேற்று உஸ்வட்டகெய்யாவ தேவாலயத்தில் நடைபெற்றது. அங்கு நடைபெற்ற ஆராதனையில் பேராயர் மெல்கம் ரஞ்சித் உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்துரையாற்றிய அவர், அரசியல் வாதிகள் பணத்தை பெற்றுக் கொண்டு காடழிப்பு, சதுப்பு நிலங்களை நிரப்புதல், மலைகளில் கட்டிடங்கள் அமைப்பதற்கு அனுமதி அளித்தல் போன்ற பாரியளவில் சுற்றுச் சூழலை நாசப்படுத்த உதவி செய்தனர். அத்தோடு அவற்றுக்கு பக்கப்பலமாகவும் இருந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட பேரிடரில் இன்னும் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். ஏன் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது. சிலர் தனது சுயநலத்திற்காக சுற்றுச் சூழலை முழுமையாக நாசப்படுத்தியதாலாகும்.

எவ்வித ஒழுக்கமும் அற்ற நிலையில் குப்பை கூளங்களை வீதியில் வீசி, முழு நாட்டையும் அசுத்தமாக்கியது யார். நாங்களே இவற்றை செய்தோம். இதற்கு அரசியல்வாதிகளும் பக்க பலமாக இருந்து செயற்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்ல, பணத்தை சேமிக்க துடிக்கும் பேராசைகளால் இந்த நிலைமை ஏற்பட்டது. ஆனால் நாம் மரணிக்கும் போது இவற்றை கொண்டு செல்லப்போவதில்லை என தெரிவித்தார். (ஙி)

# ஈழத்தில் ஐந்து தேர் ஊர்வலம் தரிசிக்க பிரார்த்தனை செய்வோம்–26.12.2025

**ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்**
**சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்**
**மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்**
**மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்**
**வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து**
**போதா அமளியின்மேல் நின்றும் புரண்டு இங்கன்**
**ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே**
**ஈதேஎந் தோழி பரிசுஏலோர் எம்பாவாய்.**

பக்குவ முதிர்ச்சியுடைய ஆன்மா மல இருளில் அழுந்திக் கிடக்கும் பக்குவமற்ற ஆன்மாவை எழுப்பி இறைவனுடைய அருள் நீரிற் கலக்க அழைத்து, மார்கழி மாதத்தில் சில பெண்கள் தம்முடன் அழைத்துக் கொண்டு நீராடி எம் பெருமான் திருவருளைப் புகழ்தல் என்பதும், சக்தியை வியந்ததும், சக்தியாவது அருளும் ஆகும். திருவண்ணாமலையில் அருளிய திருவெம்பாவை **இறைவனை அடைய வேண்டுமாகையால் திருவருள் வணக்கம் அவசியமாகிறது.** இம்முறை பற்றியே இறைவனை அம்மையப்பனாக நாம் எல்லோரும் **சௌந்திரிக சுந்தரேஸ்வரப் பெருமானை** வழிபட்டு முன்னோர் இலங்கையாகிய சிவபூமியில், **காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் ஐந்து தேர் ஊர்வலம் தரிசிக்க வேண்டும் என பிரார்த்தித்து** நம் சிவபூமியாகிய இலங்கையும் காரைநகர் அனைத்து அடியார்களது குலதெய்வம் நம்மை நல்வழிப்படுத்தவும், **நான்கு முனிவர், பல காலம் பல வருடங்கள் முன் தரிசித்து சிதம்பரம் கூத்தனை நாம் எல்லோரும் வழிபட எம்பெருமாள் திண்ணபுரம் கூத்தன் அருள்மிகு திருவடிகளைப் பணிந்து திருவாசகம் ஓதிப் பிரார்த்திப்போம்.**

செங்கதிரோன் கடலாடி சுந்தரேசப் பெருமானை வழிபட்டால் அப்பெருமானை கடலில் நீராடி, போற்ற வேண்டும் என்பதும், நம்மையும் வெண்மையாக உள்ளதை விளங்கச் செய்வான் எனவும், எம்பெருமானுடைய திருவுள்ளக் குறிப்பு மன்னுயிர்களுக்கு **நல்லறிவூட்டிப் பக்குவமடையச் செய்து பிறவியை நீக்கி** வீடுபேறருளுவது எனப்படும் நம் முன்னோர் வழிபாடு வாழ்த்தும் ஒலிவான் எங்கும்.

சிவபெருமான் **கைலையிற் போலத் திண்ணபுரத்தில் எழுந்தருளி, இறைவன் மானைக் கையில் ஏந்தி மானினது நான்கு கால்களும், நான்கு வேதங்களையும் வேதம் முதல்வர் தாம் என்பது காட்சியாகும். (பதி, பசு, பாசம்) இப்பதி பெருமை சொல்லொணாதது.** சௌந்தராம்பிகை சுந்தரேசப்பெருமான். பரிவார மூர்த்தங்கள் புடைசூழ வீற்றிருத்தலை நோக்கி, இறைவன் தமது சிவபுரத்தை, மண்ணுலக மக்களுக்கு காட்ட விரும்பி, ஆண்டி முனிவர் சிவ அம்லவி முருகர் முதலிய நம் முன்னோர்கள், ஆட்கொள்ளப்பட்டதை நோக்கி இறைவன் பக்குவமடைந்த அடியவர்க்கு **வீடு பேறு தரும் ஒரு சிவ் சிவ முத்தித் தலமோ என்றும் ஐயப்படுதலின் தலவிசேரம் கூறுப்பட்டது.**

சுந்தரேசப் பெருமானுக்கு வலப்பக்கத்தில் ஐயனார் கோயில் இங்கு முதன் முதலாகத் தோன்றியதும், தம்மை மெய்யன்போடு வழிபடும் தொண்டர்களுக்கு இடர்புகுதாமற் காக்கும் ஓர் அருள்மிகு தெய்வம்.

சிவன் கோயிலில் இரண்டாம் வீதியால் அரச மரத்தின் கீழ் ஆண்டி முனிவர் ஆலய வழிபாடும் அங்கு தென்கிழக்கு மூலையில் ஓர் ஒளிக்கீற்றினால் பூரணைபுட்களை ஐயனார் முனிவருக்கு அருட்காட்சியின் மூலம் எழுந்தருளியதும் தனது ஆலயத்திற்குப் பக்கத்தில் வைத்து ஆதியில் எல்லோரும் வணங்கும் பெருமையுடைய அருள்மிகு கோயில். சிதம்பரத்தில் தில்லைக் காளி தேவியின் அமைவாக வடக்கு நோக்கி வடபத்திரகாளியை நாம் வணங்கித்தான் சிவன் கோவிலுக்கு செல்வது ஓர் சிறப்பு.

ஆலய மூன்றாம் வீதியிலே தினகரன் எனும் அந்தணரால் நாட்டப்பட்டு, அங்கு வந்த துர்வாச முனிவர் வைரவர் கோயில் அமைத்து வழிபாடு செய்து வழிபடுவதையும் முன்னோர் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனவும் கூறுவர்.

திருவாசகம், திருப்பாவை தந்த மாணிக்கவாசகர் மடாலயம் 2026 ஆம் ஆண்டு 100 ஆவது பூர்த்தியாகவும் அடையாக்கதவாக அமுதத்தை பொலிவாக ஆலய மூன்றாவது வீதி ஈசனா மூலையில் சுவைமிக்க அன்னதானம் நிகழும் இறைவன் திருவருளால் ஆகும்.

இத்திண்ணபுரத்தில் பிள்ளையார், சிவன், உமை, முருகன், ஐயனார், வைரவர் எம்பெருமானது இரண்டு திருவடிகளையும் வழிபட்டு நம்முடன், இந்திரன் முதலிய தேவர்கள் மற்றும் வழிபடுகின்ற விண்ணவர் தும்புருவரும் நாரதரும், விஞ்சையரும் மலர்கள் தூவியும் அருட்சித்தும் பலவாறு வழிபடுவார்கள்.

இவ்வாறு **இந்நகரில் வருடா வருடம் பஞ்சரதம் மூன்றாம் வீதியில் ஓடுதலினால் பொலிவடையும்** அழகிய வீதியை உடைய உலகத்திலே இந்தியா சிதம்பர தரிசனம் பார்க்க முடியாதவர்கள் இங்கு இலங்கை மக்கள் பூராகவும் சிதம்பர தரிசனம் பார்க்கவும் நம் முன்னோர் அமைத்த ஆலயம் வெகுவிரைவில் புணரத்தானம் நிறைவாகி ஆலய கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், வழமைபோல் திருவிழா நடைபெற்று நாம் எல்லோரும் உய்யவும், இந்த மார்கழி மாதம் பூராக திருவாதவூரடி புராணம், திருவெம்பா பத்து நாடகள் தவிர்ந்த மற்றைய நாடகள் திருவாசகம் முற்றோதல் செய்து எல்லோரும் எங்கும் பிரார்த்திப்போம்.

சிவநேயச் செல்வர்களே முத்திக்கு வழிதெரியாது சிற்றின்ப சேற்றில் சிக்குண்டுள்ள சிறியோராகிய எம்மை வீடுபேறு எனும் இறைவனில் திருவடியை நோக்கி இட்டுச் செல்லும் அரும் பதிப்பாகிய இதனை பொருள் உணர்ந்து வாசித்தறிந்து பத்திரப்படுத்தி உங்கள் பிள்ளைகளும் வாசிக்க வழிசமைத்து திருவெம்பாவை காலத்தில் திண்ணபுரத்தில் நீக்கமற நிறைந்திருக்கும் சௌந்தராம்பிகாமேத சுந்தரேசுவரப் பெருமானை சேவித்து சகல சம்பத்துக்களையும் பெற்றிருவோமாக.



**க.கு.க.சிவபாலன்**
**சைவநெறிப்புலவர்**
**பாஞ்சசண்யம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகெங்கிலுமுள்ள கிறிஸ்தவர்கள் கிறிஸ்து பிறப்பு பெருவிழாவை நேற்றைய தினம் சிறப்பாகக் கொண்டாடினர். ஆலயங்களில் நடைபெற்ற நள்ளிரவுத் திருப்பலியில் பெருமளவான மக்கள் கலந்து சிறப்பித்தனர். - (படங்கள்:- ஜோசப்நயன், சிவசாந்தன்)

# வெள்ள நிவாரணத்தில் பாரபட்சம் வவுனியாவில் கவனயீர்ப்பு

(வவுனியா)

**வெள்ள நிவாரணக் கொடுப்பனவில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வவுனியா, சூடுவெந்தபுலவு கிராம மக்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.**



வவுனியா, சூடுவெந்தபுலவு கிராம அலுவலர் அலுவலகம் முன்பாக குறித்த கவனயீர்ப்புப் போராட்டம் நேற்று முன் தினம் புதன்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 25 ஆயிரம் ரூபா கொடுப்பனவினை பாதிக்கப்படாதவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், பாதிக்கப்பட்ட பலருக்கு குறித்த கொடுப்பனவு வழங்கப்படவில்லை எனவும் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

இதன் போது ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கிராம சேவையாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு எதிராக பதாதைகளை தாங்கி இருந்ததோடு கோசங்களையும் எழுப்பி இருந்தனர்.

அத்துடன் குறித்த நிவாரணங்களை பாரபட்சமற்ற முறையில் எமக்கு கிடைப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-250)

# வீதியோர வியாபார கடைகளை அகற்றும் வவுனியா மாநகரசபை

(வவுனியா)

வவுனியாவில் வீதியோர வியாபாரங்களை அகற்றும் செயற்பாட்டினை வவுனியா மாநகரசபை முன்னெடுத்திருந்தது.

நத்தார் பண்டிகை மற்றும் புத்தாண்டு வியாபாரம் வவுனியாவில் களை கட்டியுள்ள நிலையில் வர்த்தக நிலையங்களிற்கு முன்பாக நடைபாதையைத் தடை செய்யும் முகமாக கொட்டகை அமைத்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், வீதியோரங்களிலும் பொதுமக்களிற்கு இடையூறு ஏற்படும் வகையில் அங்காடி வியாபார நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதன் காரணமாக பொது மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகி வருவதுடன், விபத்துக்களும் ஏற்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டு மாநகர சபையினரால் நடைபாதை மற்றும் வீதியோரங்களை ஆக்கிரமித்து வியாபார நடவடிக்கைகள் மேற்கொண்டு வரும் கொட்டகைகள் மற்றும் பொருட்களை அகற்றும் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளரின் உத்தரவுக்கமைய வருமான வரி பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், உட்பட உத்தியோகத்தர்கள் இச் செயற்பாட்டை முன்னெடுத்திருந்தனர். (8-250)

# மோட்டார் வாகன சாரதி தரம் III பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பொதுச் சேவையின் இணைந்த சாரதிகள் சேவையில் நிலவும் மோட்டார் வாகன சாரதி தரம் III பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக, வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறியால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவி வெற்றிடங்கள் திறந்த போட்டிப் பரீட்சை மூலமாக நிரப்பப்படவுள்ளன. இப் பரீட்சைக்கான முழுமையான விளம்பரம் மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவற்றை வடக்கு மாகாண சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளமான www.np.gov.lk இல் (Exams and Recruitments → Advertisement→ 2025) என்ற பகுதியின் ஊடாகப் பார்வையிடவும் பதிவிறக்கம் செய்துகொள்ளவும் முடியும்.

தகைமையுடைய விண்ணப்பதாரர்கள், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2026.01.12 இற்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு செயலாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 900 | 900 | 900 | 800 |
| உருளைக்கிழங்கு | 200 | 250 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 1500 | 1300 | 800 | 1200 |
| தக்காளி | 600 | 700 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 200 | 200 | 150 |
| கோவா | 300 | 300 | 400 | 400 |
| கரட் | 400 | 350 | 400 | 400 |
| பூசணி | 120 | 140 | 150 | 150 |
| புடோல் | 450 | 450 | 400 | 400 |
| வாழைக்காய் | 100 | 80 | 150 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250-300 | 300 | 400 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 200 | 250 |
| பாகற்காய் | 1200 | 1300 | 1500 | 2000 |
| வெண்டக்காய் | 400 | 300 | 400 | 600 |
| கருணைக்கிழங்கு | 350 | 260 | 300 | 400 |
| பயற்றங்காய் | 800 | 850 | 1000 | 1200 |
| லீக்ஸ் | 400 | 350 | 400 | 400 |
| பீற்றூட் | 300 | 600 | 600 | 800 |
| கறிமிளகாய் | 1200 | 1000 | 1000 | 1200 |
| முருங்கைக்காய் | 2000 | -- | 2000 | — |
| போஞ்சி | 800 | 750 | 1000 | 1000 |
| கத்தரிதம்புள்ள | 800 | 700 | 600 | 700 |
| கீரை - 1 பிடி | 150 | 160-200 | 200 | 250 |
| தேசிக்காய் | 600 | 600 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 200 | 150 | 150-200 |
| இராசவள்ளி | 600 | 700 | 500 | 600 |
| வெங்காயப்பூ | 600 | 1000 | 600 | 800 |
| முள்ளங்கி | 300 | 250 | 400 | 400 |
| பொன்னாங்காணி | 80 | 120 | 200 | 80 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 150 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடமாடும் சேவை

(மன்னார்)

மன்னார் மாவட்டச் செயலகம் நடத்தும் Clean Srilanka திட்டத்தின் நடமாடும் சேவை மற்றும் விசேட மக்கள் சேவை என்பன எதிர்வரும் 29 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணிவரை மன்னார் மாவட்டச் செயலக வளாகத்தில் இடம்பெறவுள்ளது. (8)

## விலைமனுக் கேள்விக்கான அழைப்பு 13
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்
## சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2026

1. யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் சார்பாக மாவட்டச் செயலகத்தின் **திணைக்களப் பெறுகைக்குழுவின் தலைவர்** தகுதியான/தகைமை வாய்ந்த சிற்றுண்டிச்சாலை நடாத்துனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றார்.

2. **இது தேசிய போட்டி விலைக்கேள்விமுறையாக இருந்தாலும் வடக்கு மாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்கு** மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

3. யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் உள்ள சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல்

4. ஆர்வமுள்ள விலைக் கேள்விதாரர்கள் யாழ் மாவட்ட செயலக பெறுகை அலகில் கேள்விப்பத்திரங்களை இலவசமாகப் பார்வையிடுவதோடு மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் குறித்த விடயத்திற்கு கேள்வி ஆவணங்களின் இரு பிரதிகள் மட்டுமே விநியோகிக்கப்படும்

5. அக்கறையுள்ள கேள்வியாளர்கள் எழுத்து மூலமான விண்ணப்பத்துடன் மீளளிக்கப்படாத கட்டணமாகிய (Non refundable fee) அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையினை மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணத்தில் உள்ள பெறுகை அலகு அலுவலகத்தின் மூலம் செலுத்தி பற்றுச்சீட்டை சமர்ப்பிக்குமிடத்து 26.12.2025 தொடக்கம் 08.01.2026 வரை மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரையும் 09.01.2026 மு.ப 9.00 மணியிலிருந்து பி.ப 1.00 மணிவரையும் அலுவலக நேரங்களில் கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.
   இது தொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கங்கள்
   021 221 4633/ 021 222 2233, 2234 (Ext.- 140)
   Facsimile - 021 222 3674
   www.jaffna.dist.gov.lk

6. அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கேள்வித்தொகைகளுக்கான கேள்விப் பிணைப்பொறுப்பு (Bid Security) கேள்விகளுடன் இணைக்கப்பட்டு **தலைவர், திணைக்களப் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு **09.01.2026 பி.ப 2.30**மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ ஒப்படைக்கப்படல் வேண்டும். மேலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வி இலக்கத்தினையும் **(Bid ID)**, கேள்வி விபரத்தினையும் **(Description)** குறிப்பிடல் வேண்டும். கேள்விகள், சமூகமளிக்கும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

7. கிடைக்கப் பெற்ற விலைக்கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது விலைக் கேள்வியில் ஒருபகுதியை மட்டும் ஏற்றுக்கொள்வது அல்லது நிராகரிப்பது அல்லது இப் பெறுகையை எந்தவொரு நிலையிலும் விலைக் கேள்வியாளர்களுக்கான பொறுப்புகள் எதிலுமிருந்து விடுபட்டு முழுமையாக இரத்துச் செய்வதற்கு திணைக்களப் பெறுகைகள் குழுவிற்கு அதிகாரமுள்ளது.

8. மேற்படி மாவட்டச் செயலகத்தின் சிற்றுண்டி உணவகத்தை நடத்த விண்ணப்பம் செய்யும் எவரும் மாவட்டச் செயலகத்தினால் உறுதிப்படுத்தும் தரத்திலும் அளவுகளிலும் உணவுப்பண்டங்களை வழங்குவதுடன் ஒப்பந்த காலப்பகுதியில் இடையறாத சேவையினை வழங்க வேண்டும்.

**விபர அட்டவணை கீழ்வருமாறு:**

| தொ. இல | கேள்வி இல | விபரம் | ஒப்பந்த காலம் | கோரப்படும் கேள்விப்பிணைப்பணம் | | மீளளிக்கப் படாத தொகை (ரூபாவில்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை (ரூபாவில்) | செல்லுபடியாகும் காலம் | |
| 01. | JDS/ PROC/ Canteen/ 02/15(R)/ 2025 | சிற்றுண்டிச்சாலையினை ஒப்பந்த அடிப்படையில் குத்தகைக்கு வழங்குதல் 2026 | 12 மாதங்கள் | 10,000/- | 12.02.2026 | 1,000/- |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-4667)

# 'மறுமலர்ச்சிக்கான பாதை' திட்டத்தின் கீழ் வீதிபுனரமைப்பு

(யாழ்ப்பாணம்)


மறுமலர்ச்சிக்கான பாதை - 2025" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மயிலிட்டி வடக்கு J/246 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வீதிகளின் புனரமைப்பு பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

"கிராமிய பாதைகளுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - மறுமலர்ச்சிக்கான பாதை" எனும் தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் கிராம வீதிகளை அபிவிருத்தி செய்யும் செயற் திட்டமானது கடந்த ஜூன் மாதம் உத்தியோகபூர்வமாக ஆரம்பமானது.

இந்நிலையில் குறித்த அபிவிருத்தி திட்டத்தில் வலி வடக்கு J/ 246 கிராம சேவகர் பிரிவில் கிராம மக்கள் மற்றும் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பின் கீழ்



யார்மை குடியிருப்பு வீதி , அங்கந்தனை வீதி, நாவலடி குடியுருப்பு வீதி, பெரும்பரப்பு பிள்ளையார் குடியேற்றத் திட்டம் வீதியில் 1 ஆம், 2 ஆம், 3 ஆம் வீதிகள், விளங்காவத்தை வெள்ளவாய்க்கால் வீதி மற்றும் கிராமக்கோடு குடியிருப்பு வீதி ஆகிய வீதிகளும், ஆகியவற்றை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. (8-33)


## சேவை நலன் பாராட்டு




திருமதி. தில்லைரஞ்சினி கணேசமூர்த்தி - SLTS-I
(Special Science Tri, B.A, PGDE)
பகுதித் தலைவர்
தரம் 08, 09

கடந்த 05 வருடங்களாக எமது பாடசாலையில் அரும்பணியாற்றிய ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவை விபரம்**

- ஆசிரிய நியமனம் - 01.02.1989
- யா/கரம்பொன் சண்முகநாதன் மகா வித்தியாலயம் -30.06.1989 - 01.02.1993
- யாழ்.பலாலி ஆசிரிய கலாசாலை -02.02.1993 - 31.12.1994
- யா/கரம்பொன் சண்முகநாதன் மகா வித்தியாலயம் -01.01.1995 - 08.10.1998
- யா/இளையதம்பி இந்து வித்தியாலயம் -09.10.1998 - 16.06.2010
- யா/ உயரப்புலம் மெ.மி.த.க வித்தியாலயம் - 17.06.2010 - 01.01.2020
- யா/யாழ் இந்து மகளிர் கல்லூரி -02.01.2020- இன்று வரை

(C-4668)


ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதம்

# இஸ்ரேலை மீண்டும் மீண்டும் சீண்டும் ஹமாஸ் பதிலடி நிச்சயம் என்கிறார் நெதன்யாகு!

**(ஜெருசலேம்)** இஸ்ரேல் இராணுவத்தினர் மீது வெடி குண்டுத் தாக்குதல் நடத்திய ஹமாஸ் பயங்கரவாதிகளுக்கு, நிச்சயம் பதிலடி கொடுக்கப்படும் என்று பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.



இஸ்ரேல் - ஹமாஸ் அமைப்பினர் இடையே கடந்த 2 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடைபெற்று வருகிறது.

இதில், 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் தாக்குதலால் நிலை குலைந்துபோன காசாவில் ஆயிரக்கணக்கான மக்கள் உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகள்கூட இல்லாமல் திண்டாடி வருகின்றனர்.

இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்பின் 20 அம்சத் திட்டத்தை ஏற்று இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நிறுத்தம் கொண்டு வரப்பட்டது.

ஆனால், போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் மீறியதாக காசா மீது இஸ்ரேல் இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. அண்மையில் இஸ்ரேல் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஹமாஸின் முக்கிய தளபதி ரயிட் சயித் உயிரிழந்தார்.

இந்தச் சூழலில் ராபாவில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத் தாக்குதலில் இஸ்ரேல் இராணுவ வீரர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து, ஹமாஸ்க்கு நிச்சயம் பதிலடி கொடுப்போம் என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் ஒக்டோபர் மாதம் போடப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை ஹமாஸ் முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும். காசாவில் இருந்து போராட்டக்குழுவை ஆட்சி அதிகாரத்தில் இருந்து அகற்றுவதும், பயங்கரவாதம் இல்லாத பிராந்தியத்தை உருவாக்குவதுதான் அதன் நோக்கம். போர் ஒப்பந்தத்தை மீறும் ஹமாஸ்க்கு நிச்சயம் பதிலடி கொடுப்போம், எனக் குறிப்பிட்டிருந்தது.

இந்த எச்சரிக்கையை தொடர்ந்து, காசாவில் இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதலில் பாலஸ்தீனத்தை சேர்ந்த ஒருவர் உயிரிழந்தார். மேலும், ஒரு குழந்தை உட்பட 6 பேர் படுகாயமடைந்தனர். (3)

# வெனிசுலா மீது அமெரிக்கா சட்டவிரோத ஆக்கிரமிப்பு

## ஐ.நா நிபுணர்கள் கடும் கண்டனம்!



(வோஷிங்டன்)

வெனிசுலா மீது அமெரிக்கா மேற்கொண்டுள்ள பகுதி அளவிலான கடல்சார் முற்றுகை, சட்டவிரோத இராணுவ ஆக்கிரமிப்பாகும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை நிபுணர்கள் நால்வர் கூட்டாக கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

கரீபியன் கடற்பரப்பில் பாரிய இராணுவப் படைகளைக் குவித்து, வெனிசுலாவின் எண்ணெய் தாங்கிக் கப்பல்களை அமெரிக்கா மறித்து வருகிறது. இது, ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட ஒரு செயலாகும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தன்னிச்சையான பொருளாதாரத் தடைகளை அமுல்படுத்துவதற்காக இத்தகைய இராணுவப் பலத்தைப் பயன்படுத்துவதற்கு எந்தவொரு நாட்டுக்கும் உரிமை இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த நிலையில், [illegible] ஆம் ஆண்டின் சர்வதேச ஆக்கிரமிப்பு வரையறையின்படி சட்டவிரோதமானது என்றும் நிபுணர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன், இந்த விவகாரத்தில் அமெரிக்க காங்கிரஸ் உடனடியாகத் தலையிட்டு, மனித உரிமை மீறல்களுக்குக் காரணமான இந்த முற்றுகையைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வெனிசுலா தனது எண்ணெய் வளத்தைப் பயன்படுத்தி பயங்கரவாதத்திற்கு நிதி அளிப்பதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றம் சாட்டி வருகிறார்.

அதேவேளை, உலகின் மிகப்பெரிய எண்ணெய் இருப்பைக் கொண்டுள்ள தமது நாட்டின் வளங்களைக் கைப்பற்றவே அமெரிக்கா இத்தகைய சதித்திட்டங்களை முன்னெடுப்பதாக வெனிசுலா அரசு குற்றம் சுமத்தி வருகிறது. (3)

# நிலவில் அணுசக்தி நிலையத்தை நிறுவ திட்டமிட்டுள்ள ரஷ்யா!



(மொஸ்கோ)


விண்வெளி ஆராய்ச்சியில் தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கில், ரஷ்யா அடுத்த தசாப்தத்திற்குள் நிலவில் ஒரு அணுசக்தி நிலையத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அடுத்த தசாப்தத்திற்குள் (2036 இற்குள்) நிலவின் மேற்பரப்பில் ஒரு அணுசக்தி நிலையத்தை அமைக்க ரஷ்ய விண்வெளி நிறுவனமான ரோஸ்கோஸ்மோஸ் திட்டமிட்டுள்ளது.

பூமியின் ஒரே இயற்கைத் துணைக்கோளான நிலவை ஆய்வு செய்வதற்காக ரஷ்யாவும் சீனாவும் இணைந்து "சர்வதேச நிலவு ஆராய்ச்சி நிலையத்தை" உருவாக்கி வருகின்றன.

இந்த ஆராய்ச்சி நிலையத்திற்கும், அங்கு இயக்கப்படவுள்ள ரோவர்கள் மற்றும் விண்வெளி ஆய்வகங்களுக்கும் தடையற்ற மின்சாரத்தை வழங்குவதே இந்த அணுசக்தி நிலையத்தின் முதன்மை நோக்கமாகும்.

இது ஒருமுறை சென்று திரும்பும் பயணங்களிலிருந்து மாறி, நீண்டகால நிலவு ஆய்வுத் திட்டத்திற்கு வழிவகுக்கும்" என ரோஸ் கோஸ்மோஸ் தனது அறிக்கையில் தெரி



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இருண்ட காலத்திற்கு பிறகு ஒளிரும் பெத்லஹேம் புதிய நம்பிக்கையுடன் நத்தார் கொண்டாட்டங்கள்!

**(பெத்லஹேம்)** ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● ● **காசா பகுதியில் நிலவும் தற்காலிக போர்நிறுத்தத்திற்கு மத்தியில், மேற்கு கரையில் உள்ள இயேசு கிறிஸ்துவின் பிறந்த இடமான பெத்லஹேமில் இரண்டு வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் நத்தார் கொண்டாட்டங்கள் ஆரம்பமாகியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



கடும் குளிரிலும் தற்காலிக கூடாரங்களில் தங்கியிருக்கும் இலட்சக்கணக்கான காசா மக்களுக்கு மத்தியில், இந்தக் கொண்டாட்டங்கள் ஒரு புதிய நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளன.

ஜெருசலேமின் லத்தீன் தேவாலயத்தின் பேராயர் கர்தினால் பியர்பாட்டிஸ்டா பிஸாபல்லா, ஜெருசலேமிலிருந்து பெத்லஹேம் நோக்கிப் பாரம்பரிய ஊர்வலத்தை முன்னெடுத்துச் சென்று கொண்டாட்டங்களைத் தொடங்கி வைத்தார்.

அண்மையில் காசாவிலுள்ள கத்தோலிக்கத் திருச்சபைக்குச் சென்று வந்த அவர், அங்கிருக்கும் கிறிஸ்தவ சமூகத்தின் வாழ்த்துக்களையும், அவர்கள் மீண்டும் வாழ்வைக் கட்டியெழுப்பக் கொண்டுள்ள உறுதியையும் பகிர்ந்துகொண்டார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக முடங்கிக்கிடந்த பெத்லஹேமின் பொருளாதாரம், இந்த மீள் கொண்டாட்டங்கள் மூலம் உயிர் பெறத் தொடங்கியுள்ளது.

பெத்லஹேமின் 85 சதவீத குடும்பங்கள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சுற்றுலாத்துறையையே நம்பியுள்ளன. ஹோட்டல் உரிமையாளர்கள், சுற்றுலா வழிகாட்டிகள், கடைக்காரர்கள் மற்றும் வாகன சாரதிகள் ஆகியோர் போர்க்காலத்தினால் இழந்த தமது வாழ்வாதாரத்தை மீட்க ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

இஸ்ரேலினால் இரத்து செய்யப்பட்ட வேலை அனுமதிப் பத்திரங்கள் மற்றும் பாலஸ்தீன அதிகார சபையின் ஊழியர்களுக்கு வழங்கப்படும் பகுதி நேரச் சம்பளம் போன்ற சவால்களுக்கு மத்தியிலும், இந்த நத்தார் கொண்டாட்டங்கள் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

பெத்லஹேம் முதல்வர் மாஹர் நிக்கோலா கனாவதி கருத்துத் தெரிவிக்கையில், "இரண்டு ஆண்டு கால மௌனத்திற்குப் பிறகு, நத்தார் உணர்வை மீண்டும் கட்டியெழுப்பியுள்ளோம்.

பெத்லஹேம் மக்களுக்கு ஒரு சிறந்த நாளை நோக்கிய நம்பிக்கை தேவைப்பட்டது.

பாலஸ்தீன மக்கள் அமைதிக்குத் தயாராக இருக்கிறார்கள் என்பதையும், அவர்கள் வாழ்க்கையை நேசிக்கிறார்கள் என்பதையும் உலகுக்குச் சொல்ல விரும்புகிறோம்."

மேலும், பெத்லஹேம் தற்போது பாதுகாப்பாக இருப்பதாகவும், சுற்றுலாப் பயணிகளை வரவேற்க விருந்தகங்கள் தயாராக உள்ளதாகவும் அவர் அழைப்பு விடுத்தார். (3)

...ந்துள்ளது.


...நிலவில் சூரிய சக்தி ...போதும் கிடைக்காது ...ர்பதால் அங்கு ஒரு ...லையான மின்சக்திக்கு, ...ணுசக்தி மிகச் சிறந்த ...ற்றாகக் கருதப்படுகிறது.

... 1961 ஆம் ஆண்டு யூரி ...ாரினை விண் ...ளிக்கு அனுப்பி, விண் ...ளி வரலாற்றில் முத ...டம் பிடித்த ரஷ்யா, ...பகாலமாக அமெரிக்கா ...றும் சீனாவின் அசுர ...ர்ச்சியால் கடும் போட் ...யைச் சந்தித்து வருகி...

...குறிப்பாக, 2023 ...ஸ்டில் ரஷ்யா அனுப் ... லூனா - 25 விண் ...ம் நிலவில் மோதித் தோல்வியடைந்ததும், ஈலோன் மஸ்க்கின் ஸ்பேஸ் - எக்ஸ் போன்ற நிறுவனங்கள் விண்கல ஏவுதலில் புதிய புரட்சியை ஏற்படுத்தியதும் ரஷ்யாவிற்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளன.

இழந்த பெருமையை மீட்டெடுக்கவே இந்த அணுசக்தி நிலையத் திட்டத்தை ரஷ்யா கையில் எடுத்துள்ளது.

இந்தத் திட்டம் வெற்றியடைந்தால், நிலவு என்பது வெறும் ஆய்வுத் தளம் மட்டுமல்லாமல், மனிதர்கள் நீண்டகாலம் தங்கி ஆய்வு செய்யும் ஒரு வாய்ப்பு உள்ளது. (3)



## கர்நாடகாவில் சோகம்

# பேருந்து தீப்பிடித்து கோர விபத்து; 17 பேர் உடல் கருகி உயிரிழப்பு!



(டில்லி)

இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்ற விபத்தில், பேருந்து தீப்பிடித்து எரிந்ததில் சுமார் 17 பேர் உயிரிழந்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் பலர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பெங்களூருவிலிருந்து கோகர்ணா நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் சொகுசு பேருந்து, சித்ரதுர்கா மாவட்டத்தின் ஹிரியூர் அருகே தேசிய நெடுஞ்சாலை 48இல் சென்று கொண்டிருந்தது.

இதன்போது, எதிர்த் திசையில் வந்த கொள்கலன் லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து, பேருந்தில் மோதி விபத்துக்குள்ளானது. லொறி மோதியதில் பேருந்தின் எரிபொருள் தாங்கி வெடித்துச் சிதறியதால், பேருந்து தீப்பற்றியுள்ளது.

இந்த விபத்தில் இதுவரை 17 பேர் உயிரிழந்திருக்கலாம் என ஆரம்பக்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. பலரது உடல்கள் அடையாளம் காணமுடியாத அளவுக்கு எரிந்துள்ளன.


தீக்காயமடைந்த சுமார் 12இற்கும் மேற்பட்ட பயணிகள் மீட்கப்பட்டு, சித்ரதுர்கா மற்றும் துமகூரு மாவட்ட வைத்தியசாலைகளில் அவசர சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்புத் துறையினர் மற்றும் பொலிஸார், நீண்ட நேரம் போராடித் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

லொறி ஓட்டுநரும் விபத்தில் உயிரிழந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

சித்ரதுர்கா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

கிறிஸ்மஸ் தினமான நேற்று அதிகாலையில் நேர்ந்த இந்தத் துயரச் சம்பவம் கர்நாடகா மாநிலத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேருநுவர பகுதியில் பேருந்து கவிழ்ந்து விபத்து

## 14 பேர் காயம்

(திருமலை)

திருகோணமலை, சேருநுவர பகுதியில் தனியார் சொகுசு பேருந்து ஒன்று சாரதியின் வேகக்கட்டுப் பாட்டை இழந்து கவிழ்ந்து விபத்துக் குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை இடம்பெற்ற இந்த விபத்தில் 14 பேர் காய மடைந்துள்ளதாகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

அக்கரைப்பற்றிலிருந்து சுமார் 25இற்கும் மேற்பட்ட பயணி களுடன் திருகோணமலை நோக் கிப் பயணித்த குறித்த சொகுசு பேருந்து, நேற்றுக் காலை 7 மணியளவில் மஹிந்தபுர சந்திக்கு அருகில் சென்றபோது விபத்துக் குள்ளாகியுள்ளது.

பேருந்து சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்தின் போது காயமடைந் தவர்கள் உடனடியாக அப்பகுதி மக்களின் உதவியுடன் மீட்கப்பட்டு, சேருநுவர வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளனர்.

இந்த விபத்தில் எவருக்கும் ஆபத்தான காயம் ஏற்படவில்லை என உறுதிபடுத்திய சேருநுவர பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்ற னர். (நி)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1993 - இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>12 இல்செவ்<br>கி-பா- 30<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc, Teacher<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி<br>தொ.இ: B/16354 | பிறப்பு-1989-RC<br>நட்சத்திரம்: பூசம்<br>2இல்செவ்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, MA<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/16398 |
| பிறப்பு:1981-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>10 இல் சூரிசெவ்<br>கி-பா: 11 1/4<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்- Dip in Civil Engineering, MA<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: B/16356 | பிறப்பு-1989-RC<br>நட்சத்திரம்-மிருகசீரிடம்<br>கி-பா: 65<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, Cleark<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/15679 |
| பிறப்பு:1996- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>2இல் செவ்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: A/L, Swiss<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16358 | பிறப்பு: 1993-இந்து<br>நட்சத்திரம்-அச்சுவினி<br>7 இல் செவ்<br>கி.பா - 18 1/2<br>உயரம்-5'4"<br>தகைமை/தொழில்: BSc, MSc, (Aus)<br>எதிர்பார்ப்பு: உயர் பதவிகள்<br>தொ.இ: G/15680 |
| பிறப்பு: 1996- இந்து<br>நட்சத்திரம்:பூராடம்<br>7 இல் செவ்<br>உயரம்:5'6"<br>தகைமை/தொழில் - பட்டதாரி, UK<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: B/16359 | பிறப்பு-1999-இந்து<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் - MBBS (Final year)<br>எதிர்பார்ப்பு: Doctor, Engineer<br>தொ.இ: G/15682 |
| பிறப்பு: 1989 - இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி-பா: 36<br>1இல்செவ்<br>உயரம்:5'5"<br>தகைமை/தொழில் - A/L, Manager<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/16361 | பிறப்பு: 1994-இந்து<br>நட்சத்திரம்:பூரம்<br>7இல்செவ்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்-BSc, Accountant (London)<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/15686 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# இன்று ஒரு தகவல் 506



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## இளமையாக இருக்க

எனக்கு இது நடக்க வேண்டும். அது நடக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்பவர்கள் தான் இந்த உலகத்திலே அதிகம்! ஆனால் ஒரு விடயம் மட்டும் எனக்கு நடக்கக்கூடாது!" என்று தான் எல்லோருமே ஆசைப்படுகிறோம். அது என்ன விடயம்? வயதாகின்ற விடயம் தான்.

வயதாகக்கூடாது என்பது தான் நம் ஆசை! ஆனால் அது நம் கட்டுப்பாட்டிலே உள்ள விடயமில்லை! ஆனால் ஒன்று வயதானாலும் இளமையாக இருக்க முடியும். அது நம் கையிலேதான் இருக்கிறது! சரி ரொம்ப நாளைக்கு இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இருப்பதற்கு என்ன வழி? நிபுணர்கள் இதற்கு என்று சில யோசனைகளை சொல்லி இருக்கிறார்கள். முதல் விடயம் உடம்பு குண்டாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். உடம்பு அளவாக இருக்கின்றவர்கள் உற்சாகமாக இருக்கிறார்கள். உடம்பு பெரிதாக இருந்தால் சர்க்கரை வியாதி, இதயநோய் இதெல்லாம் வருவதற்கான சான்ஸ் அதிகம்.

சரி உடம்பைக் குறைப்பது எப்படி? சில பேர் இதற்காக கலோரியைக் குறைக்க முயற்சி செய்வார்கள்.

கொழுப்பைக் குறைக்க வேண்டும். அதுதான் முக்கியம். உடற் பயிற்சியும் வேண்டும். பட்டாணி - பருப்பு தானிய வகையெல்லாம் சாப்பிடலாம். விற்றமின் E, C, A மூன்றும் அவசியம் தேவை. மஞ்சள் நிறத்தில் இருக்கின்ற பழங்கள், காய்கறிகளிலே பீட்டா கரோட்டின் (விற்றமின் A) இருக்கு. மாம்பழம் - பப்பாளி - கரட் - கீரை வகை தாராளமாக சாப்பிட வேண்டும்.

உடம்பு, தசை, எலும்பு நன்றாக இருக்க புரோட்டின் தேவை. ஆனால் அது அதிகமாகிப் போனால் மந்தமாக - கனமாக Feel செய்வோம். வயதான காலத்திலே அதிகமாக வெயிலிலே அலைய வேண்டாம். போதுமான தூக்கம் வேண்டும். தூக்கம் குறைந்தால் சோர்வாக ஆகிவிடுவோம்.

இந்த உலகத்திலே வயதானபின்பும் ரொம்ப சௌக்கியமாக சந்தோஷமாக பல பேர் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர் களையெல்லாம் ஆராய்ந்து பார்த்தார்களாம். அவர்கள் எல்லாம் சும்மா இருப்பதில்லை. தானாக ஏதாவது தொண்டு, தோட்ட வேலை இது மாதிரி ஏதாவது செய்பவர்களாக இருக்கிறார்களாம். இப்படி இருக்கிறவர் களுக்கு அதிகமான இரத்தம் மூளைக்குப் போகிறது அவர்களைச் சுறுசுறுப்பாக இருக்க வைக்கிறது. புத்தி கூர்மையாக இருந்தால் அவர்கள் ரொம்ப நாளைக்கு சௌக்கியமாக இருப்பார்களாம். நிறைய டாக்டர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால், You will stay young if you think young.

இளமை எண்ணங்கள் உங்களை இளமையாக வாழ வைக்கும்.

நாற்பது ஆனவுடனே நான் வாழ்ந்து முடித்து விட்டேன் என்று பேசிக்கொண்டிருக்கக்கூடாது! வேலையிலேயிருந்து ரிட்டயர் ஆகி அறுபது வயதுக்கு மேலே "இனிமேல் தான் எனக்கு வாழ்க்கையே ஆரம்பம்" என்று சொல்பவர்களும் இருக்கிறார்கள்!

எப்பவும் இளமை எண்ணத்தோடு இருக்கப் பழகிக் கொள்ளுங்கள் சார். அப்படியிருக்கப் பழகிவிட்டால் உங்களுக்கு வயதாகின்ற களைப்பே வராது! மூச்சு இழுத்து விடுவது நுரையீரலுக்கு நல்ல பயிற்சி. முடிந்த அளவுக்குக் காற்றை உள்ளே இழுத்து வெளியே விடுங்கள்.

ஒருவர் தன்னுடைய 70 வயதிலே இப்படி செய்து, அதே நேரம் புகைப்பிடிக்கின்ற பழக்கத்தையும் விட்டு விடுகிறார் என்று வையுங்கள். அப்படி இருந்து விட்டால் அவருடைய நுரையீரல் 40 வயதுகாரருக்கு இருக்கின்ற மாதிரி இருக்குமாம். சோம்பல் தளர்ச்சி இருக்காதாம். வயதான நாம் களைப்பாக இருப்பதற்கு முக்கிய காரணமே நம் (Body System) உடம்பிலே ஆக்சிஜன் குறைவுதுதான்! நுரையீரல் நன்றாக இருந்தால் இந்தக் குறை வராது. அதனாலே முதுமையை நீங்கள் வெல்ல வேண்டுமா?

சத்தான உணவு, தவறாத உடற்பயிற்சி - நல்ல மனநிலை இது மூன்றும் அவசியம். ஒரு கடற்கரையிலே மூன்று தாத்தாக்கள், உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்களாம். தங்களுடைய இளமையின் இரகசியம் என்ன என்பதைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருந்தார்கள். அந்த மூன்று பேரிலே கொஞ்சம் இளமையாகத் தெரிந்தார் ஒருவர். அவர் சொன்னார்.

"தான் சின்ன வயதிலேயிருந்தே சிகரெட் அடிப்பதில்லை. அதனாலே தான் நான் இப்படி இருக்க முடியுது!" என்றார். அப்படி என்றால் இப்போது உங்கள் வயது என்ன என்று கேட்டார். அடுத்தவர். "80 முடிந்து 81 ஆரம்பம்" என்றார் அவர். இன்னொரு தாத்தா சொன்னார். "நான் சின்ன வயதுலேயிருந்தே சிகரெட்டும் குடிப்பதில்லை. மதுவும் அருந்து வதில்லை! அதனாலே தான் இப்போது நான் இப்படி இருக்க முடியுது!" என்றார். "உங்கள் வயது என்ன?" என்று கேட்டார் மற்றவர்.

"90 முடிந்து 91 ஆரம்பம்!" என்றார்.

கடைசியாக மூன்றாவது தாத்தா சொன்னார். "நான் சின்ன வயதிலேயிருந்தே சிகரெட்டு குடிப்பேன் - மது அருந்துவேன் மாமிசம் சாப்பிடுவேன். எதுவும் தள்ளுபடி இல்லை! அதனாலே தான் நான் இப்படி இருக்கிறேன்!" என்றார்!

மற்ற ரெண்டு பெருக்கும் ஆச்சரியம் "அப்படி என்றால் உங்க வயதென்னா?" என்று கேட்டார். அவர் ரொம்ப நிதானமாக, "இப்போது தான் 40 முடிந்து 41 ஆரம்பம்!" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




நல்லூர் சிவன் கோவில் என அழைக் கப்படும் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாச நாதசுவாமி தேவஸ்தான மஹோற்சவம் நேற்றுக் காலை 7 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.
(படங்கள்: சிவசாந்தன்)

# நோயற்ற வாழ்வு

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது எமது முன்னோர் முதுமொழியாகும். மனித வாழ்க்கையில் எதிர்கொள்ளும் துன்பங்களில் நோயால் வரும் துன்பம் இன்றும் தொடர்கிறது. நோய் என்ற சொல் எம் உடலுறுப்புகளை வருத்தும் என்ற பொருளை உள்ளடக்கியது. அது உள்ளத்தையும் துன்புறுத்தும். ஆனால் அதை எளிதாக விரட்டி விடலாம். "வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும்" என்ற பழமொழி இதனையே உணர்த்துகிறது.

நோய் எம்மை அணுகுவதற்கு எம்முடைய செயற்பாடுகள் தான் காரணமாகின்றன. நாம் உண்ணும் உணவு, நாம் வாழும் சூழல் என்பவற்றிற்கும் நோய்க்கும் தொடர்புண்டு. உணவுப்பழக்க வழக்கங்கள் நோயற்ற வாழ்வு வாழ உறுதுணையாக அமையும். அத்துடன் உடல் தூய்மையும் நோய் நம்மை அணுகாது தடுக்கும்.

இதனால் எமது முன்னோர்கள் உணவுக் கட்டுப்பாட்டைப் பேணி வந்தனர். ஒவ்வாத உணவு பற்றி நன்கு அறிந்திருந்தனர். "மோர் பெருக்கி நெய்யுருக்கி நீர்கருக்கி உண்பவர் தம் பேர் உரைக்கில் போமே பிணி" என்ற கருத்துரை இதனை நன்கு புலப்படுத்துகிறது. உணவு அளவாக உடலுக்குச் சேரவேண்டும். உண்ட உணவு செரிமானம் அடைந்தப் பின்னரே மீண்டும் உணவு உண்ண வேண்டும். இது நோய் உடலை அணுகாமல் காப்பாற்ற ஒரு வழியாகும்.

நோய்க்கு உணவையே மருந்தாகப் பயன்படுத்தும் மரபும் தமிழரிடையே நிலைத்திருந்தது. மூலிகைகள், பச்சிலைகள், காய்கள் என்பன நோய்த்தடுப்பு ஆற்றல் கொண்டவை.

நோய்க்கு மருந்தாகவும் பயன்படுபவை. இஞ்சி, மஞ்சள் போன்ற கிழங்கு வகைகள் இத்தகையவை. நார்ச்சத்து, மாச்சத்து இரும்புச்சத்து, சுண்ணாம்புச் சத்து, இனிப்புச்சத்து, நோய் எதிர்ப்புச் சத்து போன்ற உடல்நலத்திற்குத் தேவையான சத்து வகைகள் பற்றிய அறிவு எமது முன்னோர்களிடம் இருந்தது. சிறப்பாக உணவு ஆக்கும் பெண்களுக்கு இப் பட்டறிவும் பயிற்சியும் இருந்தன. அதனால் நோய் வருமுன்னே காக்கும் செயற்பாடும் அவர்களிடம் இருந்தது.

சுத்தம் சுகம் தரும் என்பது எம்மவரிடையே நிலவும் ஒரு கருத்தாகும். உடலைத் தூய்மையாக வைத்திருந்தால் நோய் அணுகாது. "கூழானாலும் குளித்துக்குடி" கந்தையானாலும் கசக்கிக் கட்டு" போன்ற பழமொழிகள் நாட்டுப் புறத்தவரிடையே நிலவியது.

இது அவர்களுடைய தூய்மை பற்றிய விழிப்புணர்வை விளக்குவதாக உள்ளது. உடல் தூய்மையோடு சுற்றுப்புறச் சூழலும் தூய்மையாக இருக்க வேண்டும். பற்றைச் செடிகொடிகள் வீட்டைச் சுற்றிப் படர்ந்திருப்பின் நுளம்பு பரவுவதற்கு வாய்ப்பு ஏற்படும்.

அதனால் மலேரியா போன்ற தொற்று நோய்கள் பரவும். இந்நோய் வீட்டிலுள்ளவர்களை மட்டுமன்றி ஊர் முழுவதையுமே பற்றிக் கொள்ளும். எனவே அத்தகைய நோய்த் தொற்றைத் தடுப்பதற்கு எல்லோரும் இணைந்து பணி செய்ய வேண்டும்.

நீர்நிலைகளைத் தூய்மையாக வைத்திருப்பதன் மூலமும் நோய்ப் பரவலைத் தடுக்கலாம். தூய்மையான நீர் பருகுவதால் "வாந்தி பேதி" எனும் வயிற்றோட்ட நோயை எளிதாகத் தடுக்கலாம். சுட்டாறிய நீரைப்பருகுவது நோயைத் தரும் கிருமிகளின்றும் தப்புவதற்கு எளிதான வழியாகும்.

நாம் அணிகின்ற ஆடைகளையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். நாம் வாழும் சூழலின் வெப்ப தட்ப நிலைகளுக்கு ஏற்ப ஆடைகளை அணிய வேண்டும். உடல் உறுப்புகளை இறுக்கி ஆடைகளை அணியக் கூடாது.

அது உடல் வளர்ச்சியைக் கட்டுப்படுத்தும். இன்னும் தோல் தொடர்பான நோய்கள் பரவ வாய்ப்பளிக்கும். குறிப்பாகக் குழந்தைகளுக்கு அணிவிக்கும் ஆடைகளில் சிறப்பாக இது கருத்திற் கொள்ளப்பட வேண்டும் .

தூய்மையான காற்றை உள்வாங்குவதால் பல நோய்கள் வராமல் தடுக்கலாம். உடற்பயிற்சியும் நோயற்ற வாழ்வுக்கு வழி சமைக்கும். தற்போது உடலுழைப்பு இன்மையால் பலருக்கு இருதயம் தொடர்பான நோய்கள் இருக்கின்றன. அவை வராமலிருப்பதற்கு உடற்பயிற்சி செய்வது நன்று. "சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம்" என்பர். எமது உடல் நலமாக இருந்தால் நாம் மகிழ்வாக வாழலாம்.

இயற்கையோடு இயைபுபட்டு வாழ்ந்தால் நோய் வருவதற்குரிய சூழ்நிலை குறைவு. ஆனால் தற்போது செயற்கையான நடைமுறைகளாலும் செயற்பாடுகளாலும் மாறு பட்ட உணவுப்பழக்கங்களாலும் உடல் நலம் கெடும் வாய்ப்புகள் பெருகி விட்டன.

புதிய மருத்துவ அறிவும் மருந்துகளும் மலிந்து விட்டன. மருந்தே உணவாக மக்கள் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. இந் நிலையை விரைவாக மாற்ற வேண்டும். நம் முன்னோர் வழியை மீள ஒருமுறை எண்ணிச் செயற்பட வேண்டும்.




# இராசிபலன்

26.12.2025
மார்கழி 11 , வெள்ளிக்கிழமை
சஷ்டி முற்பகல் 10.42 மணிவரை
சதயம் காலை 6.42 மணிவரை

பூரட்டாதி பின்னிரவு 6.12 மணிவரை
சுபநேரம் -6.27-7.57 மணிவரை
இராகுகாலம் 10.57-12.27 மணிவரை

சந்திராஷ்டமம்- மகம்

வளவன்

**மேஷம்** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.

**ரிஷபம்** எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், செய்தொழில் மேன்மையுண்டு, பிறர் உதவியுண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்கள் செல்லும் எண்ணம் உருவாகும், இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, விரயங்கள் மேலோங்கும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** சென்ற இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள்,செய்தொழில் மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள்.

**கன்னி** செய்தொழில் முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**துலாம்** புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்யும் வாய்ப்புண்டு, பிள்ளைகளின் வளர்ச்சி கண்டு பெருமையடைவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, உடல் நலனில் கவனம் தேவை.

**விருச்சிகம்** உறவினர் நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்கள் கைகூடும் வாய்ப்புண்டு,வழிபாடு மகத்துவம் தரும்.

**தனுசு** குடும்ப மகிழ்ச்சி கூடும்,எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மகரம்** வழிபாட்டில் ஆர்வம் கூடும், இயல்பான வாழ்வில் இன்பங்கள் கூடும், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கும்பம்** ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றமுண்டு, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம்.

இன்றைய பணியை இன்றே செய்வோம் அது தான் சிறந்தது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் 4

# பொன்னியின் செல்வன்

## காவியத் தொடர் 942





பின்னர் கந்தமாறன் முதலியவர்களைப் பார்த்து, "கந்தமாறா! உன்பாடு யோகந்தான்! உன் வீட்டுக்கு மேலும் விருந்தாளிகள் வரப் போகிறார்கள். சுந்தர சோழருக்குப் பிறகு சோழ நாட்டுக்குச் சக்கரவர்த்தியாகப் போகிற மதுராந்தகர் வரப் போகிறார். அவருக்குப் பட்ட மகிஷியாகப் போகும் சின்னப் பழுவேட்டரையரின் மகளையும் உடன் அழைத்து வந்தாலும் வருவார். கடம்பூர் மாளிகை ஒரே கோலாகலமாகத் தானிருக்கும். பழுவூர்ப் பாட்டனார் தஞ்சைக்குப் புறப்படட்டும். நாம் வேட்டைக்குப் புறப்படலாம். வாருங்கள்! வில் வித்தையில் ஒரு காலத்தில் நான் வல்லவனாக இருந்தேன். 'அர்ச்சுனனுக்கு அடுத்தபடி ஆதித்த கரிகாலன் தான்' என்று பெயர் வாங்கியிருந்தேன். மூன்று வருடங்களாக வில்லைத் தொடாமல் வில் வித்தையே மறந்து போய் விட்டது. மறுபடியும் பழக்கம் செய்து கொள்ள வேண்டும். பார்த்திபேந்திரா! வந்தியத்தேவா! எல்லாரும் கிளம்புங்கள்! வேட்டைக்கு எங்கே போகலாம்? கொல்லிமலைக்குப் போகலாமா?" என்று பொதுப் படையாகக் கரிகாலன் கேட்டான்.

இத்தனை நேரமும் எந்தப் பேச்சிலும் கலந்து கொள்ளாமலிருந்த சம்புவரையர், "கோமகனே! கொல்லிமலை வெகு தூரத்தில் இருக்கிறது. அவ்வளவு தூரம் போக வேண்டியதில்லை. வீரநாராயண ஏரியின் மேற்குக் கரையில் அடர்ந்த காடு இருக்கிறது. அதைத் 'தண்டகாரண்யம்' என்றே சொல்வதுண்டு. வேட்டைக்கு வேண்டிய காட்டு மிருகங்களும் அங்கே ஏராளமாக இருக்கின்றன. அந்தக் காட்டிலிருந்து வேட்டையாடிக் கொண்டு வந்த மிருகங்கள் தான் நமது வேட்டை மண்டபத்தில் உள்ளவை. ஏரிக்கரைக் காடு, இம்மாளிகைக்குச் சமீபத்திலும் இருக்கிறது. காலையில் வேட்டையாடப் புறப்பட்டுச் சென்றால் இரவு வீடு திரும்பி விடலாம்!" என்றார்.

"அப்படியே செய்யலாம், ஐயா! இந்த மாளிகையில் நான் விருந்தாளியாயிருக்கும் வரையில் தாங்கள் வைத்ததே எனக்குச் சட்டம். தங்கள் குமாரி மணிமேகலையையும் வேட்டைக்கு அழைத்துப் போகலாமா? அவள் இருக்குமிடம் எப்போதும் கலகலப்பாயிருக்கிறது!" என்றான் ஆதித்த கரிகாலன்.

"எனக்கு ஆட்சேபமில்லை மணிமேகலையைக் கேட்டுப் பார்க்கலாம்" என்றார் சம்புவரையர்.

அப்போது கந்தமாறன் "வேட்டைக்குப் போகும் இடத்தில் பெண்கள் எதற்கு? அவர்கள் பத்திரமாயிருக்கிறார்களா என்று பார்ப்பதற்குத்தான் வேலை சரியாயிருக்கும். வேட்டையில் கவனம் செலுத்த முடியாது. மேலும், நந்தினி தேவிக்கு இங்கே துணை வேண்டுமல்லவா?" என்றான்.


"ஆமாம் ஆமாம் கந்தமாறனுக்கு எப்போதும் பழுவூர் பாட்டியைப் பற்றித் தான் கவலை. மணிமேகலையை அழைத்துப் போவதில் இன்னொரு கஷ்டமும் இருக்கிறது.

அவள் துள்ளிக் குதிப்பதைப் பார்த்துவிட்டு மான் துள்ளிக் குதிப்பதாக நினைத்து யாராவது அவள் பேரில் அம்பை விட்டாலும் விடுவார்கள். பெண்கள் அரண்மனையிலேயே இருக்கட்டும், நாம் வேட்டைக்குப் போகலாம். நாளை அதிகாலையில் புறப்பட வேண்டும். (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஆசை



மணிவண்ணனுக்கு சந்தோஷமாக இருந்தது. மதுரையிலிருந்து வந்த அவன் மாமா அவனுக்கு ஒரு பேனாவை அன்பளிப்பாகக் கொடுத்திருந்தார். மணிவண்ணன் இப்படி ஒரு பேனாவைப் பார்த்தது கூட கிடையாது.

இவன் வகுப்பில் படிக்கும் எம்.எல்.ஏ. மகனிடம் கூட இப்படிப்பட்ட பேனா இல்லை. பேனாவின் மூடியும், முள்ளும் தங்கம் போல பளபளவென்றிருந்தது. பள்ளிக்கூடம் போனதும் பேனாவை எல்லோரிடமும் காட்டினான். மாமா இவன் மீது மிகவும் அன்பு வைத்திருந்தார். வகுப்பில் முதல் மாணவனாகவும் ஒழுக்கமான வனாகவும் விளங்கிய மணி வண்ணனை உற்சாகப் படுத்த விரும்பினார் அவன் மாமா. "நீ படித்து பெரியவனாகி என்ன வேலைக்குப் போவாய்" என்று கேட்டார் அவன் மாமா.

"நான் படித்து கலெக்டராக வருவேன்" என்றான் மணிவண்ணன். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அவன் அப்பா "தம்பி விரலுக்கேத்த வீக்கம் வேண்டும். நீ சாதாரண விவசாயியின் மகன். நீ ஆசைப்படுவதில் அளவு வேண்டும்" என்றார். மணிவண்ணனின் சந்தோஷம் மணலில் பாய்ந்த தண்ணீராய் மறைந்து போனது. "ஒரு ஏழையின் மகன் கலக்டராக வர ஆசைப்படுவது பேராசையா?" என்று நினைத்தான். வகுப்பில் மணிவண்ணன் உற்சாகமின்றி உட்கார்ந்திருந்தான். பாடங் களில் அவன் மனம் லயிக்கவில்லை. வகுப்பு ஆசிரியர் அவனை கவனித்து விட்டார்.

ஆசிரியர் அவனை தனியாக அழைத்து விசாரித்தார். "ஒரு ஏழையின் மகன் கலக்டராக ஆசைப்படுவது பேராசையா" என்றான். அவன் சொன்னதைக் கேட்டதும் ஆசிரியர் கலகலவென்று சிரித்தார். "இதற்கு நானே உனக்கு நல்ல பதிலைச் சொல்லுவேன். ஆனாலும் இன்று மாலை வரை காத்திரு. எது பேராசை என்று புரிந்து கொள்வாய்" என்றார். அன்று மாலை பள்ளியின ஆண்டு விழா நடைபெற்றது. ஆண்டு விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமை தாங்கினார். மாவட்ட ஆட்சித் தலைவர் பேசும் போது மாணவர்கள் நன்றாகப் படித்து முன்னுக்கு வரவேண்டும் என்று அறிவுரை சொல்லிக் கொண்டிருந்தார். கூட்டத்தில் உட்கார்ந்திருந்த மணிவண்ணனிடம் வந்த ஆசிரியர், "உன் சந்தேகத்தை அவரிடமே கேள்" என்றார். முதலில் தயங்கிய மணிவண் ணன் தைரியமாக எழுந்து கலெக்டரிடம் கேட்டான். "ஒரு ஏழை விவசாயியின் மகன் கலெக்ட்ராக வர ஆசைப் படுவது பேராசையா?"

"நிச்சயமாக இல்லை. நேர்மையான வழியில் பெறுவ தாய் இருந்தால் உலகத்தைக் கூட வாங்க ஆசைப்படுவதில் தவறு இல்லை" என்று பளிச் சென்று கூறினார் கலெக்டர். "நானும் ஒரு சாதாரண ஏழை விவசாயியின் மகன் தான்"

"உழைப்பும் உறுதியான முயற்சியும் இருந்தால் எதற்கும் ஆசைப்படலாம். அது பேராசை ஆகாது" என்று பேசி முடித்தார் கலெக்டர். இருபது ஆண்டுகள் கழிந்தன. அதே பள்ளியில் மாவட்ட ஆட்சித் தலைவர் மணிவண்ணன் ஆண்டு விழாவில் பேசிக் கொண்டிருந்தார்.

"நம்பிக்கையும் உறுதியான முயற்சியும் உழைப்பும் தரத் தயாராக இருந்தால் கலெக்டராக மட்டுமல்ல. இந்த நாட்டின் ஜனாதிபதியாக வர ஆசைப் படுவது கூட பேராசை ஆகாது" என்று கலெக்டர் மணிவண்ணன் சொன்ன போது மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவான, அமைதியான மனமே எதிர்பாராதா சூழ்நிலைகளிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## இயற்கையைப் பாதுகாக்கும் மனநிலையை ஏற்படுத்துங்கள்

சுனாமி எனும் ஆழிப் பேரலை அனர்த்தம் நடந்து இன்று 21 ஆண்டுகள் ஆகிவிட்டன.

யாருமே எதிர்பாராத அந்த இயற்கைப் பேரனர்த்தம் உலகம் முழுவதிலும் காவு கொண்ட மனித உயிர்கள் ஏராளம் ஏராளம்.

சங்க கால இலக்கியங்களில் பேசப்படுகின்ற ஆழிப் பேரலை அனர்த்தம் நாம் வாழும் காலத்தில் நிகழ்ந்து மிகப்பெரும் மனிதப் பேரவலத்தை ஏற்படுத்திவிட்டுப் போனமை வேதனையிலும் வேதனை.

ஆம், கொடுமையிலும் கொடுமை என்று கூறுமளவில் சுனாமி அனர்த்தம் எக்காலத்திலும் மறக்க முடியாத மனிதப் பேரிடரைத் தந்துவிட்டது.

இன்று 21 ஆண்டுகள் ஆகிவிட்ட இந்நேரத்தில், சுனாமிப் பேரலைக்கு தம் இன்னுயிரை நீத்தவர்களை நினைவுகூருவது நம் அனைவரதும் கடமை.

அதேசமயம் ஆழிப் பேரலை ஏற்படுத்திய அழிவுகளை நினைவுகூருகின்ற இந்நேரத்தில், இயற்கையைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து கொள்வது இங்கு முதன்மைக்குரியது.

ஆம் அதீத விஞ்ஞான தகவல் தொழில்நுட்பம்; வசதிகளையும் வாய்ப்புகளையும் ஏற்படுத்தியிருந்தாலும் எங்கள் வாழ்வியலில் தீராத துன்பங்களையும் நோய்களையும் மரணங்களையும் இயற்கையின் சீற்றங்களையும் தந்துள்ளன என்பதை நாம் மறந்துவிடலாகாது.

ஆம், உலகநாடுகள் தயாரிக்கின்ற அணுவாயுதங்கள், அது சார்ந்து நடத்தப்படுகின்ற பரிசோதனைகள், இரசாயனக் கழிவுகள், போர் நடக்கின்ற இடங்களில் வீசப்படுகின்ற இரசாயனக் குண்டுகள் என்பன உலக நாடுகளால் இயற்கைக்கு ஏற்படுத்துகின்ற தீங்காகும்.

அதுபோல உற்பத்தி நிறுவனக் கழிவுகள், பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் உற்பத்திகள் நம் வாழ்விடங்களில் ஏற்படுத்துகின்ற பாதிப்புகள் சொல்லுந்தரமன்று.

இதற்கும் அப்பால், ஒவ்வொரு மனிதர்களும் தனித்தும் கூட்டாகவும் இயற்கையை வஞ்சிக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஜீரணிக்க முடியாத பெரும் துன்பம்.

ஆம், இயற்கையைப் பேணுவதில் தனி மனிதர்களிடம் இருக்கக்கூடிய பொறுப்பு என்பது எதிர்க்கணியப் பெறுமதியிலேயே உள்ளது.

இதை உதாரணப்படுத்துவதற்கு நாம் வேறு எங்கும் செல்ல வேண்டியதில்லை. அதற்கு எங்கள் யாழ்ப்பாணம் போதுமானது.

உண்மை. வீட்டுக் கழிவுகள் மற்றும் பொலித்தீன், பிளாஸ்ரிக் பொருட்களை மூடை கட்டி வீதியில் போடுகின்ற மனநிலை இன்னமும் நம்மிடம் இருக்கும்போது இயற்கையைப் பாதுகாக்க வேண்டும் என்ற சிந்தனை எம்மிடம் துளியும் இல்லை என்பது பட்டவர்த்தனமாகத் தெரிகிறது.

ஆகவே சுனாமி பேரனர்த்தத்தின் நினைவாகிய இந்நாளில் இயற்கையைப் பாதுகாக்கும் மனநிலையை அனைவரிடமும் வலுப்படுத்துவோம் - அதற்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்துவோம்.

# ஜனவரி முதல் விஷேட தேடுதல் 2,341 துப்பாக்கிகள் பறிமுதல்

2025 ஜனவரி முதலாம் திகதி முதல் இதுவரை மேற்கொள்ளப்பட்ட விஷேட தேடுதல் நடவடிக்கைகள் ஊடாக மொத்தமாக 2,341 துப்பாக்கிகளை பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

அவற்றில் 73 ரி-56 ரக துப்பாக்கிகள், 59 ரிவோல்வர்கள், 83 பிஸ்டல்கள் மற்றும் 2,126 ஏனைய துப்பாக்கிகள் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வருடத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளில் 1,793 கிலோ 139 கிராம் ஹெரோயின், 3,683 கிலோ 163 கிராம் ஐஸ், 16,686 கிலோ 62 கிராம் கஞ்சா ஆகியவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்துடன் 37 கிலோ 899 கிராம் கொக்கைன் மற்றும் 746 கிலோ 673 கிராம் ஹஷிஸ் போதைப் பொருட்களையும் பொலிஸார் தமது பொறுப்பில் எடுத்துள்ளனர்.

இதேவேளை, ஜனவரி 01 ஆம் திகதி முதல் இதுவரை பொலிஸார் மேற்கொண்ட விஷேட நடவடிக்கைகளின் போது 790,461 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது பல வேறு குற்றங்களுடன் தொடர்புடைய 6,641 நபர்களும் நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 73,634 நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 48,345 நபர்களுக்கான திறந்த பிடியாணைகளை நடைமுறைப்படுத்த பொலிஸாருக்கு முடிந்ததாகவும் குறிப்பிட்டனர். (ம-7)

## நுவரெலியாவில் கஞ்சாவுடன் நால்வர் பொலிஸாரால் கைது

(நுவரெலியா)

நுவரெலியா மாவட்டம், மஸ்கெலியா பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போது 45 ஆயிரம் ரூபா விற்கும் அதிக பெறுமதியுடைய கஞ்சா பொதிகளுடன் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளதாக மஸ்கெலியா பொலிஸார் தெரிவித்தனர்.

இக்கைது நடவடிக்கை நேற்று முன்தினம் (24) மாலை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மஸ்கெலியா மற்றும் சாமிமலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நால்வரில் ஒருவர் நீண்டகாலமாக இந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்துள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

இலஞ்சம் வாங்கிய குற்றச்சாட்டில்

## கம்பஹா குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி கைது

கம்பஹா பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதப் பொருட்கள் கையிருப்பில் வைத்திருந்த நபர் ஒருவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருப்பதற்காக மூன்று இலட்சம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (ம-7)

## ரி-56 ரக துப்பாக்கியுடன் கொழும்பில் ஒருவர் கைது

ரி - 56 ரக துப்பாக்கியுடன் கொழும்பு - கிராண்ட்பாஸ் ஜோசப் வீதி பகுதியில் நேற்று முன்தினம் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிராண்ட்பாஸ் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளின் போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடமிருந்து ரி - 56 ரக துப்பாக்கி மற்றும் 27 தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபர் கொழும்பு 14ஐச் சேர்ந்த 67 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிராண்ட்பாஸ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

இவ்வருடத்தில் இது வரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2,250,000 ஐக் கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

ஜனவரி முதலாம் திகதி முதல் டிசம்பர் 21ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 2,258 202 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளனர்.

இவ்வாறு வருகை தந்தவர்களில் அதிகமானோர் இந்தியப் பிரஜைகளாவர்.

அதன்படி, இந்தியாவில் இருந்து 510,133 பேரும் பிரித்தானியாவில் இருந்து 204,703 பேரும் ஜேர்மனியில் இருந்து 141,941 பேரும் மற்றும் சீனாவில் இருந்து 129,403 பேரும் வருகை தந்துள்ளனர்.

இவர்களுக்கு மேலதிகமாக பிரான்ஸ், அவுஸ்திரேலியா மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்தும் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர்.

அதேவேளை டிசம்பர் மாதத்தின் முதல் 21 நாட்களில் மட்டும் 154, 609 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் குறிப்பிட்டுள்ளது. (ம-7)

## ஜப்பான் டோக்கியோவில் இலங்கையர் ஒருவர் கைது

ஜப்பானின் டோக்கியோ நகரில் ஷினகாவா புகையிரத நிலையத்திற்கு அருகில் துப்பாக்கி மற்றும் வாள் கட்டுப்பாட்டுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் இலங்கையர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இலங்கையர் கூர்மையான ஆயுதம் ஒன்றினால் தனது கழுத்தை அறுக்க முற்பட்ட போதே கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தைக் கண்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் அதனைத் தடுத்து நிறுத்தியுள்ளதுடன் பின்னர் அப்பகுதிக்கு வருகை தந்த சுமார் பத்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவினர் நிலைமையைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கைகள் மற்றும் கழுத்துப் பகுதியில் காயங்களுடன் மயக்க நிலையில் இருந்த குறித்த இலங்கையர் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் துப்பாக்கி மற்றும் வாள் கட்டுப்பாட்டுச் சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாராளுமன்றத்தில் பெண்களின் அரசியல்

## 23

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

குறித்த அரசானது பெயரளவில் மகாராணியாரை அரசாங்கத்தின் தலைவராக கொண்டிருப்பினும் நிறைவேற்று அதிகாரங்கள் பிரதமர் தலைமையிலான அமைச்சரவையிடமே காணப்படும் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஆதரவுடையவரை அரசாங்கத் தலைவர் பிரதமராக நியமிப்பார்.

பிரதமரே சட்ட வாக்கத்துறையின் தலைமையையும் நிர்வாகத் துறையின் தலைமையையும் ஏற்பார். அமைச்சரவையானது கூட்டுப் பொறுப்புடையதாக அமையும். இங்கு சட்டவாக்கத்துறையும் நிர்வாகத் துறையும் நெருங்கிய தொடர்பு கொண்டது. ஆனால் ஜனாதிபதி ஆட்சி முறையில் இவ்விரு அதிகாரங்கள் பிரிக்கப்படுவதை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

1978 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பினூடாக இலங்கையின் ஆட்சிமுறையை மாற்றியமைத்து, மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியொருவரின் கீழ் நிர்வாகத்துறையைக் கொண்டு வரும் வகையில் புதிய அரசியலமைப்பை ஜே. ஆர்.ஜெயவர்த்தன உருவாக்கியிருந்தார்.

இது வெஸ்ட்மினிஸ்டர் முறையிலிருந்து நீங்கி அமெரிக்க முறையையொத்த பலம்மிக்க ஜனாதிபதி முறையை இலங்கையில் கொண்டு வரும் முயற்சியாக இருந்தது. ஆனால், ஜே.ஆர். ஜெயவர்த்தன இதனை முழுமையான அமெரிக்க மாதிரியில் வடிவமைக்கவில்லை.

அவர் பிரதமர் என்ற பதவியும், அமைச்சரவை அமைச்சர்கள் என்ற பதவியும் தொடருமாறு இதனை வடிவமைத்தார்.

### விகிதாசார பிரதிநிதித்துவ முறை

தேர்தல் முறைமைகளுக்கமைய மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கும் பெருமளவிலான முறைமைகள் உலகெங்கிற்கும் செயற்படுவதைக் காணமுடிகின்றது.

உலக நாடுகளில் காணப்படுகின்ற அத்தகைய முறைமைகளில் ஒன்றுக்கு ஒன்று முரணான விடயங்கள் பல காணப்பட்ட போதிலும் அவை அனைத்தும் முக்கியமாக பெரும்பான்மை முறைமை மற்றும் விகிதாசார பிரதிநிதித்துவமுறைமை என இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு விளக்கப்படுகின்றது.

இம் முறைமைகளில் பெரும்பான்மை முறைமையின் (Majority System) கீழ் தேர்தல் தொகுதியின் அதிகூடுதலான வாக்குகளை பெற்றுக் கொள்கின்ற வேட்பாளர், பிரதிநிதியாக தேர்ந் தெடுக்கப் படுகின்றார்.

விகிதாசார பிரதிநிதித்துவ முறையொன்றின் கீழ் (Proportional Representative System) ஒரு கட்சி அல்லது குழுசார்பாக வாக்காளரினால் தமது வாக்குகள் பயன்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக வாக்களிக்கப்பட்ட அக் கட்சியின் அல்லது குழுவின் வேட்பாளர்கள் பலர் சார்பாக விருப்புகளை அடையாளமிடுவதற்கும் வாக்காளருக்கு இடமளிக்கப்படுகின்றது. உரிய கட்சி அல்லது குழுவினால் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கையின் சதவீதத்திற்கமைய அவற்றிற்கான ஆசன உரித்துரிமை கிடைக்கப் பெறுவதோடு, வேட்பாளர்கள் பெற்றுக் கொள்கின்ற விருப்புகளின் எண்ணிக்கை ஒழுங்குவரிசைக்கமைய உரிய உறுப்புரிமைக்கான வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

தற்போது இலங்கையில் அமுல் செய்யப்படுகின்ற பாராளுமன்றத் தேர்தல்கள் இதற்கமையவே பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற முறைமையின் அடிப்படைத் தத்துவம் யாதெனில், ஒரு தரப்பினரால் உரித்தாக்கிக் கொள்ளப்படுகின்ற உறுப்புரிமைகளின் எண்ணிக்கைக்கும் பெற்றுக்கொள்ளப்படுகின்ற வாக்குகளுக்குமிடையே குறிப்பான ஒரு விகிதாசாரமுறை பேணப்படுகின்றதென்பதாகும்.

விகிதாசார முறைமையின் கீழ் வாக்காளருக்கு உரிய கட்சியை (தரப்பை) மாத்திரம் தேர்ந்தெடுப்பதற்கு இடமளிக்கப்படுகின்ற ஒருமுறையும் சில நாடுகளில் செயற்படுத்தப்படுகின்றன. அத்தகைய நாடுகளில் வேட்பாளர்களின் பெயர்ப் பட்டியலின் ஒழுங்கு தீர்மானிக்கப்படுவது கட்சியினாலேயேயாகும்..

இவ்வாறான பட்டியல் முறை பின்பற்றப்படுகின்ற நாடுகளில் கட்சிகளுக்கு தொகுதிகளின் உரித்துரிமை கிடைக்கப் பெறுகின்றமை காரணமாக தேர்தலின் போது அளிக்கப்பட்ட வாக்குகளில் ஒரு குறிப்பிட்ட வெட்டுப்புள்ளி வாக்குகளின் சதவீதத்தைப் பெற்றுக் கொள்வதும் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது. 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ் 12 சதவீதமாகவிருந்த இச் சதவீதஅளவு பின்னர் 5% சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் உட்சேர்க்கப்பட்ட முதலாவது சட்டத்திற்கமைய கட்சியினால் அல்லது குழுவொன்றினால் கையளிக்கப்பட வேண்டிய வேட்புமனுப் பத்திரமொன்றில் வேட்பாளர்களின் பெயர்கள் அவ் வேட்பாளர்களின் முன்னுரிமை ஒழுங்கிற்கமையவே (the order of Priority) உட்சேர்க்கப்பட வேண்டுமென விதிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இம்முறைமை 1988 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் திருத்தச்சட்டத்தினால் மாற்றியமைக்கப்பட்டது. விகிதாசார முறையில் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் பற்றி இன்னுமொரு கட்டுரையில் பார்ப்போம்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## முகப்பு வாயிலை...

யாழ்ப்பாணம் முற்றவெளியை சீமெந்துக் கல்லுகளை நாட்டி எல்லைப்படுத்தும் வேலைத்திட்டத்தை முன்னெடுத்து வரும் தொல்லியல் திணைக்களம், யாழ்ப்பாணம் கோட்டை முனியப்பர் ஆலயத்தின் நுழைவாயிலையும் சீமெந்துக் கல்லுகளை நாட்டி முனியப்பர் ஆலயத்துக்குச் செல்லுகின்ற பாதையைத் தடைசெய்துள்ளது.

மிகப்பழைமையான யாழ். கோட்டை முனியப்பர் ஆலயத்தின் நுழைவாயிலை தொல்லியல் திணைக்களம் இவ்வாறு தடை செய் ததன் மூலம் சைவ மக்களின் உரிமைகளைப் பறிப்பதில் தொல்லி யல் திணைக்களம் மும்முரமாகச் செயற்பட்டு வருவது உறுதி செய்யப் படுவதாக சைவ சமய அபிமானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

காலாகாலமாகப் பயன்பாட்டிலிருந்த கோட்டை முனியப்பர் ஆலயத்தின் நுழைவாயிலை தடை செய்வதென்பது அடிப்படையில் நியாயமற்ற செயல் எனப் பக்தர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ந)

## படுகொலைக்கு...

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் படுகொலை செய்யப்பட்டமைக்கு நீதி வேண்டி ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு - காந்தி பூங்காவில் இருந்து மாநகர சபை மண்டபம் வரை நேற்று (25) குறித்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்பில் தேவாலயத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் 20ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்றாகும்.

இந்தநிலையில் அவர் படுகொலை செய்யப்பட்டமைக்கு நீதி கோரி குறித்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மாநகரசபை முதல்வர், பிரதேச சபை தவிசாளர்கள், உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.(ம-7)

## கிறிஸ்துமஸ்...

கிறிஸ்துமஸ் தினமான நேற்று வவுனியாவில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டிருந்தனர்.

வவுனியா பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், இந்த கிறிஸ்துமஸ் தினத்தில் சர்வதேசத்திற்கு ஒரு செய்தியை கூறுவதாகத் தெரிவித்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது வடக்கு-கிழக்கில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களது சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் கருத்துத் தெரிவிக்கையில்,

வவுனியா, காணாமல் ஆக்கப்பட்ட தமிழ்க் குழந்தைகளின் தாய்மார்கள் மற்றும் குடும்பங்கள், ஏ9 நெடுஞ்சாலையில் வவுனியா நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள சாலையோர வன்னிப் பந்தலில் எங்கள் அமைதியான போராட்டத்தை தொடர்ந்து நடத்தி வருகிறோம். 2025 டிசம்பர் 25, கிறிஸ்துமஸ் தினம் அன்று (நேற்று) எங்கள் போராட்டம் 3,231 நாட்களை எட்டுகிறது.

எங்கள் குரல் எங்கள் அன்பான குழந்தைகள் திரும்பி வர வேண்டும் என்பதற்காக மட்டுமல்ல. எதிர்காலத்தில் எந்தத் தமிழ்க் குழந்தையும் இதே துயரைக் கண்டுகொள்ளக்கூடாது என்பதற்காகவும் நாங்கள் தினமும் துக்கத்துடன் மட்டுமல்ல, உறுதியுடனும் கூடுகிறோம்.

நீதி கோருவதற்காகவும், தமிழ் இறையாண்மைக்கு சர்வதேச ஆதரவை கோருவதற்காகவும், எதிர்கால இன அழிப்பு மற்றும் அழிவுகளிலிருந்து எமது மக்களைப் பாதுகாப்பதற்காகவும் நாங்கள் இங்கு நிற்கிறோம்.

இந்தக் கிறிஸ்துமஸ் தினத்தில், தெளிவாகக் கூறுகிறோம். எங்களுக்கு 13வது திருத்தச் சட்டம் வேண்டாம். எங்களுக்கு கூட்டாட்சித் தீர்வுகள் வேண்டாம். எங்களுக்கு ஒற்றை அல்லது மேலோட்ட அரசியல் தீர்வுகள் வேண்டாம். எங்களுக்கு வேண்டியது தமிழ் இறையாண்மையின் மீட்பு.

எமது வ்ரலாற்றை எமது பிள்ளைகளுக்குக் கற்பிப்போம். சட்டபூர்வமான மற்றும் நியாயமான வழிகளில் நீதி தேடுவோம். எமது நிலத்தை அதன் உண்மையான உரிமையாளர்களான தமிழர்களிடம் மீண்டும் கொண்டு வருவோம்.

உண்மை அழிக்கப்படக் கூடாது. நீதி தாமதிக்கப்படக் கூடாது. தமிழ் தாயகம் மறுக்கப்படக் கூடாது என்றார். (ம-7,250)

## ஆள்நடமாட்டத்...

விழுந்ததால், இந்த கிராமங்கள் மனித வாழ்விற்குப் பாதுகாப்பற்றதாக மாறியதையடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக கண்டி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ குழுவின் உதவி இயக்குநர் எல்.ஏ.கே.ரணவீர தெரிவித்துள்ளார்.

உடததாவ, நெலும் மாலை, கலநாகமடகெலே மற்றும் உடகல் தெபொக்காவ ஆகிய ஐந்து கிராமங்களே மனிதர்கள் வசிப்பதற்கு பொருத்தமற்றவை என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடததாவ கிராமத்தில் 12க்கும் மேற்பட்ட வீடுகள் நிலச்சரிவில் முழுமையாக புதைந்துவிட்டன என்றும், இதுவரை 26 குடியிருப்பாளர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இருப்பினும், இடிபாடுகளுக்கு அடியில் 30 முதல் 40 அடி ஆழத்தில் பல உடல்கள் சிக்கியுள்ளதாக நம்பப்படுவதால், காணாமல் போனவர்களின் சரியான எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாது என்றார். (ம-7)

## மாத்...

தனியார் பயணிகள் போக்குவரத்து பேருந்து ஒன்றும் டிப்பர் ரக வாகனம் ஒன்றும் மோதியதில் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தின் போது டிப்பர் வாகனத்தின் சாரதி, பேருந்தில் பயணித்தவர்கள் உட்பட படுகாயமடைந்த 30 பேரையும் அந்தப் பகுதி மக்கள் உடனடியாக மீட்டு சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர்.

விபத்தினால் இரு வாகனங்களும் பலத்த சேதங்களுக்கு உள்ளாகியுள்ளன.

விபத்து ஏற்பட்டவுடன் பேருந்தின் சாரதி அவ்விடத்திலிருந்து தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தப்பியோடிய சாரதியை கைது செய்வதற்கு பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127












































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-4671)

076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளைக்குப்பெண் தேவை

01. கட்டுவன், இந்து, 1980, கேட்டை, Germany citizen, A/L மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (Divorce பெண்ணும் விரும்பத்தக்கது.) (56218)
02. புங்குடுதீவு, இந்து, 1992, உத்திராடம், A/L Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55852)
03. அளவெட்டி, இந்து, 1993, விசாகம், Bsc Engineering (Australia), Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55831)
04. ஏழாலை, Romancatholic, 1994, Bachelor, UK past gradute, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55464)
05. புத்தூர், இந்து, 1994, சித்திரை, HNDA, Store keeper, Newzealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55379)
06. வேலணை, இந்து, 1987, ஆயிலியம், IT Engineering, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53916)
07. திருநெல்வேலி, இந்து, 1986, கேட்டை, Bsc, Director, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (48612)
08. காரைநகர், இந்து, 1986, மகம், Bsc, MBA, Phd, UK citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (36878)
09. பருத்தித்துறை, இந்து, 1986, மகம், Bsc, Moratuwa university, Divorce, Switzerland citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (28387)
10. ராசாவின் தோட்டம், இந்து, 1985, திருவோணம், PTS Security, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53155)

நீங்களாகவே எமது website www.thaalee.com இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். (C-4672)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728


# வவுனியாவில் இளைஞன் கொலை மூவர் பொலிஸாரால் கைது

வவுனியா - வீரபுரம் பகுதியில் இளைஞர் ஒருவர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளதாகச் செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21 ஆம் திகதி செட்டிகுளம், வீரபுரம் பகுதியில் இளைஞர்களிடையே ஏற்பட்ட மோதலின் போது வவுனியா, தவசிகுளம் பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய யோ.அபிசாந் என்ற இளைஞர் வாள் வெட்டுக்கு இலக்காகி மரணமடைந்திருந்தார்.

குறித்த சம்பவம் தொடர்பில் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்த செட்டிகுளம் பொலிஸார் மூவரை கைது செய்துள்ளனர்.

அவர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தொலைபேசி கலந்துரையாடலில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் வலுப்பெற்றதையடுத்து இந்தக் கொலை நடத்தப்பட்டுள்ளமை ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-7,250)

# ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா மீண்டும் திறப்பு

(நுவரெலியா)

நுவரெலியா ஹக்கல தேசிய தாவரவியல் பூங்கா நேற்று (25) முதல் சுற்றுலாப் பயணிகளுக்காக மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் அமைச்சின் அறிவுறுத்தல்கள் மற்றும் தேசிய தாவரவியல் பூங்காக்கள் திணைக்கள ஊழியர்களின் துரிதப்படுத்தப்பட்ட வேலைத்திட்டத்தின் கீழ், தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பரிந்துரைகள் மற்றும் ஆலோசனைகளுக்கு இணங்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூங்கா நிலப்பரப்பில் அபாயகரமான அறிகுறிகள் தென்பட்ட இடங்களுக்கு சுற்றுலாப் பயணிகள் பிரவேசிப்பது, அபாய எச்சரிக்கை பலகைகள் மூலம் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நுழைவாயிலுக்கு அருகிலுள்ள குளங்களைக் கொண்ட பகுதி மற்றும் வனப்பகுதியை நோக்கிய நுழைவு வீதி என்பன இவ்வாறு அபாயகரமான இடங்களாகப் பெயரிடப்பட்டுள்ளன.

அதேவேளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக தாவரவியல் பூங்கா ஊழியர்களால் விசேட வேலைத்திட்டம் ஒன்றும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7)


வேலையாள் தேவை

இயக்கச்சிப்பகுதியில் தோட்ட வேலைக்கு ஆள் தேவை. ஆண், பெண் இருபாலாரும். அண்மித்த பகுதியில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது. (1841)

தொடர்புகளுக்கு:
076 324 9977


## மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 12 - 1961



மறைவு 22 - 12 - 2025

### திருமதி மதியாபரணம் சந்தானநாயகி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் சந்தானநாயகி அவர்கள் கடந்த திங்கட்கிழமை (22.12.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான யாக்கோப்பிள்ளை - அமலஉற்பவதி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மருமகளும் மதியாபரணம்(ஓய்வுநிலை உத்தியோகத்தர் - BOC) அவர்களின் அன்பு மனைவியும் கிறிஸ்துராசா, மேரியா(லண்டன்), அமலநாயகன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சகாயரூபன்(வங்கி ஊழியர் - BOC), மேரி சுகந்தினி(பிரான்ஸ்), மேரி கிறிஸ்ரலா(அபிவிருத்தி உத்தியோகத்தர் - கரைச்சி பிரதேசசபை), சகாய அன்ரனி ஆகியோரின் அன்புத் தாயாரும் மேரி தனுசியா(ஆசிரியை - யா/ மயிலணி சைவ.ம.வி), றஜீவன்(பிரான்ஸ்), ஜெனாட்ராஜ்(World vision) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெஸ்னா, அமீஷா, ஜெஸ்மினா, அகின், நிகில் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் லக்ஷ்மியம்மா, செல்வராணி, தயாளினி, வேணுகா, ஜெயராஜா(லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துணியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று 26.12.2025 வெள்ளிக்கிழமை அன்று கரவெட்டி புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 10.00 மணியளவில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக கீரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

0777 341 4319
021 226 3828

தகவல் :
குடும்பத்தினர்

(1844)


அவண் விற்பனைக்குண்டு

உணவகத்தில் உணவு வகைகளை காட்சிப்படுத்தி வைப்பதற்கு பாவித்த நல்ல நிலையில் உள்ள இரண்டு அவண்கள் (மின் இணைப்பு அற்றவை) விற்பனைக்குண்டு. (1845)

தொடர்புகளுக்கு: 077 649 1027



Voyzant இந்தியா கோவில்கள்

ஆறுபடை வீடு | திருப்பதி | திருநாகேஸ்வரம் | இராமேஸ்வரம்
சிதம்பரம் | ஸ்ரீரங்கம் | வைத்தீஸ்வரன் | மேல்மருவத்தூர்
திருவண்ணாமலை | மதுரை மீனாட்சி | திருவெண்ணெய்நல்லூர் | சங்கரபாணி
திருவானைக்கா | காஞ்சிகாமாட்சி | ராமர்கோவில் | திருக்கடவூர்

உட்பட 35 இற்கு மேற்பட்ட கோவில்கள்
189,000/= (ஒரு நபருக்கு) (10 பேர் கொண்ட குழு)
இந்தியா விசா, இருவழி பயணச்சீட்டு மற்றும் குளிரூட்டப்பட்ட போக்குவரத்து — தங்குமிடம்
10 நாட்கள்
மேலதிக விபரங்களுக்கு: Voyzant (PVT) Ltd
புறப்படும் திகதிகள் 29.01.2026, 26.02.2026
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(நிபந்தனைகளுக்குட்பட்டது) (6308)


## 92 வது ஆண்டு அகவை நாளில் நீங்காத நினைவுகள்

### கப்டன் என்.சோமசுந்தரம்

(முன்னாள் பிரதி அதிபர்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

தோற்றம் : 26.12.1933 மறைவு : 26.10.2015



எங்கள் ஆசானும், வழிகாட்டியும், உற்ற நண்பருமான சோமசுந்தரம் மாஸ்டரை அவரின் பிறந்த தினத்தில் நெஞ்சிருத்தி நினைவுகூர்கின்றோம்.

க.தர்மகுலசிங்கம் குடும்பம்
(முகாமைத்துவப் பணிப்பாளர்
Golden Eagle K.T.(Pvt) Ltd)

(C-4669)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.12.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.